Ben Vision Printers
Digital banner and Sticker Printing, Book Page Making & Printing (Tamil & Sinhala), Offset Printing, Invitation Cards and Cake boxes, Visiting cards, Magazines, Leailets, letterheads, Labels, Laminating, Scanning (Colour), All kind of Binding, Screen Printing, Photocopy, Type Setting (Tamil, English, Sinhala)
No:335A, Thiruganasampathar Street, Trincomalee
Tel: 0262225984, 0778615206
benvisionprinters@gmail.com

அறைவு 03 இயம் 04 August 30- September 5 , 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

CCTV Installation & Maintenance
PHOTONTECK
175, Main Street Trincomalee
075 6602486

# மாணவர்களின் எதிர்காலத்தை இருட்டடிக்கும் முயற்சி

## கிழக்குப் பல்கலைக்கழகப் பீடாதிபதிகள் கூட்டாக அறிக்கை




(ஸ்ரீ)

உண்மையை அறியாமல் மாணவர்கள் தவறாக வழிநடத்தப்படக்கூடாது என்பதில் பீடாதிபதிகளான நாங்கள் மிகக் கரிசனையுடன் இருக்கின்றோம்.

மாணவர்களின் எதிர்காலத்தைக் கிஞ்சித்தேனும் கருத்திற் கொள்ளாதவர்களே மாணவர்களை வழிநடத்தி அவர்களைச் சூனியமான எதிர்காலத்திற்குள் தள்ளிவிடச் சிலர் முயற்சிக்கின்றார்கள். ஆகவே தமது எதிர்கால வாழ்வைக் கருத்திற் கொண்டு 13

## மகளிர் இராணுவத்தின் முதல் முஸ்லிம் பெண்



(ஸ்ரீ, கதிரவன்)

இலங்கை இராணுவத்தின் வரலாற்றில் முதல் முறையாக முஸ்லிம் யுவதி ஒருவர் இராணுவத்தில் இணைந்து கொண்டுள்ளார்.

திருகோணமலை 22வது இராணுவ படைத்தலைமையகத்தில் இருந்து மூன்று மாதகால பயிற்சியினை நிறைவு செய்த 35 தமிழ் இராணுவ வீராங்கனைகளுடன் மொஹமட் வசீர் ரிசானா என்ற இந்த யுவதியும் 13

## உணவு அருந்தாமல் தொடர்ந்து எழுத்து உலக சாதனை முயற்சியில் எழுத்தாளர் அனிஸ்டஸ்

திருகோணமலையின் எழுத்தாளரான அனிஸ்டஸ் ஜெயராஜா அவர்கள் உலக சாதனையொன்றை ஏற்படுத்தும் முயற்சியில் இன்று புனித சூசையப்பர் கல்லூரியில் ஈடுபடவுள்ளார்.

காலை 8.00 மணி முதல் முன்னிரவு 8.00 மணிவரைக்கும் தொடரப் போகும் அவரது உலக சாதனை முயற்சியில் " கரன்சி இல்லாத உலகம்" என்ற தலைப்பில் தொடர்ந்து 12 மணி நேரத்திற்கு எழுதுவதன் ஊடாக இச் சாதனையை அவர் படைக்கவுள்ளதாக மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

கின்னஸ் உலக சாதனைக் குறிப்புக்களின் படி இடையே உணவிற்காக ஐந்து நிமிடங்கள் ஓய்வெடுத்துக் கொள்ள முடியும் எனத் தெரிவித்த அவர் அதனைக் கூட தான் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை என்றும் 13

## உருவாகியது முத்தமிழ் சங்கம்

வரலாற்றுப் புகழ் மிக்க திருகோணமலை மாவட்டத்தின் கலை இலக்கிய செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்காக "முத்தமிழ் சங்கம் - திருகோணமலை" என்னும் பெயரில் மன்றம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் சங்கத்தின் உருவாக்கம் தொடர்பாகச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "காலத்திற்கு காலம் பல கலை 13

## கிழக்கில் 412,451 திருமலையில் 128,500

கடுமையான வரட்சியின் காரணமாக கிழக்கு மாகாணத்தில் மட்டும் 412,451 பேர் பாதிப்படைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமானவர்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் 71,479 குடும்பங்களைச் சேர்ந்த 2,52,673 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 13

## " குடியேற்றத்தை தடுத்து நிறுத்துங்கள்" – சம்பந்தன்

## "முஸ்லிம்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்" –மோடி





" மிகவும் முக்கியமான நடவடிக்கையாக வடக்குகிழக்குத் தமிழ் மக்களின் பாரம்பரியங்களைச் சிதைத்து அவர்களது பூர்வீக நிலங்களை சிங்கள மயப்படுத்தும் அரச ஆதரவுடனான குடியேற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் மீளமுடியாத , திருத்தவே முடியாத இனச் சீரழிவொன்றைச் சந்திக்க வேண்டி இருக்கும்" எனத் திரு. இரா.சம்பந்தன் அவர்கள் தெரிவித்து- ள்ளதாக "த- ஹிந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியப் பிரதமருடனான தனது சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த திரு.சம்பந்தன் அவர்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் நிலையான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத்தரவும் 13வது திருத்தத்தின் முழுச்சரத்துக் களையும் நிறைவேற்றவும் தான் முயற்சிப்பதாக இந்தியப் பிரதமர் தெரிவித்திருந்ததுடன் 13


6000.00 for 6 Months
aat SRI LANKA
@
Veal Business College
No.159, Sea View Road, Trincomalee
026 222 76 22 - 077 02 03 201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## கட்சிப் புனரமைப்பும் கண்டுகொள்ளாத மக்கள் அவலங்களும்

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி தனது கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்த்துப் புத்துயிராக்கி வருவதுடன் நிர்வாக சபைக்கு அங்கத்தவர்களையும் தெரிவு செய்து வருகின்றனர்

இந்நடவடிக்கையானது உண்மையிலேயே மக்கள் மத்தியில் சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்றை உருவாக்கியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

நீண்டகாலமாக தமிழத்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சி திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை கட்சிச் சீராக்க நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்காமலிருந்தது.

ஒரு அரசியற் கட்சியொன்றின் அடிப்படை மக்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறே ஒரு இனத்தின் போராட்டத்தின் அடிப்படையும் மக்கள்தான் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்களால் மக்களுக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தனது மூன்றாவது தசாப்தத்தில் மக்களுக்கு எதிராகப் பரிணமிக்கத் தொடங்கிய போது அப்போராட்டத்தின் வீழ்ச்சி உலக அறிஞர்களால் எதிர்வு கூறப்பட்டது.

அப்போராட்டத்தின் வீழ்ச்சியின் பின்னர் இருக்கும் இறுதி ஆயுதமான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை மக்கள் இறுகப் பற்றிக் கொண்டனர். அவ்வுணர்சிப் போக்கின் பலனாக கடந்த ஐந்து ஆண்டுகளாக வெற்றிகளை அறுவடை செய்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதே போக்குத் தொடரும் என நினைப்பது தவறானதே.

அதனை தெளிவாகக் கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல் கட்டியம் இட்டிருந்தது. விசேடமாக திருகோணமலையில் அதன் அதிர்வு உணரப்பட்டது.

ஐந்து ஆண்டுகளில் வற்றிப் போய்க்கொண்டிருக்கின்ற உணர்வுப் பெருக்கை காத்துக் கொள்வதற்கு மக்களை அண்டிப் பயணிக்க வேண்டிய தேவை அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் உருவாகிவிட்டது.

மக்களை அண்டிச் செல்வதற்கு தமக்கு அதிகாரம் இல்லை என நொண்டிச் சாட்டுச் சொல்வது என்றும் பொருந்தாது. அதிகாரம் இன்றியே மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்த வேண்டிய இடங்களில் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினால் போதும். மக்கள் அவர்களுக்கு அதிகாரத்தை வழங்கிவிடுவார்கள். அது எவ்வாறு எனில் தம்மை ஆளும் அதிகாரத்தை மக்களே அரசியல்வாதிகளிடம் வழங்கினார்கள்..... முன்னர் சொன்னது போல் மக்களே எல்லாவற்றும் அடிப்படை....

மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவது எவ்வாறு? மக்கள் போராட்டங்களின் போது அங்கு பிரசன்னமாயிருத்தல் அதற்குப் போதுமானதே.... இறுதியாக யானைத் தாக்குதலுக்கு எதிராக மதுரங்குடா மக்கள் போரிட்டபோது எதிர்கட்சி வரிசையின் மாகாணசபை உறுப்பினர் ஒருவரே அங்கு சென்றிருந்தார். அவருக்கு என்ன அதிகாரம் இருந்தது...? இதே வேளை தமிழ் அரசியல் தலைவரொருவருக்கு அழைப்பை ஏற்படுத்திய அம் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்ட பதில் எம்மை தலைகுனிய வைத்துள்ளது.

கட்சிப் புனரமைப்பு என்பது அங்கத்தவர்களைத் தெரிவதில் மட்டுமல்ல என்ற சிந்தனையை திருமலை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். கட்சியின் புனரமைப்பு செயற்படு தந்திரோபாயத்தின் மாற்றத்தில் தான் தங்கியுள்ளது.... மக்களின் அவலங்கள் கண்டுகொள்ளப்படவில்லையாயின் கட்சிப் புனரமைப்பு ஓர் செல்லாக்காசு தான்....!

## காஸாவிற்கு 1300 இலட்சம் - சம்பூருக்கு சல்லிக்காசு இல்லை




காஸா பள்ளத்தாக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த பலஸ்தீனியர்களுக்காக இலங்கை ரூபாக்கள் 1300 இலட்சத்தை நிவாரணமாக வழங்கிய இலங்கை அரசு சம்பூரில் பலவருடங்களாக அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள மக்களிற்கு உலர் உணவு நிவாரணத்தை வழங்க மறுத்து வருவதேன் என திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.


இலங்கையில் வாழும் சிறுபான்- மையின மக்களின் ஒரு தொகுதியினர் என்பதற்காகவா அல்லது கேட்பதற்கு நாதியற்ற ஏதிலியர் என்பதற்காகவா இவ்வாறு நடக்கிறது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## கடற்படையிடமிருந்து காணி தளவைத்தியசாலைக்கு

(கதிரவன்)




கிண்ணியா தளவைத்தியசாலைக்குச் சொந்தமான காணியில் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் கடற்படையினர் முகாமிட்டிருந்தனர். கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து கிழக்கு மாகாண கடற்படைத்தள பொறுப்பதிகாரி கருனாரட்ன கடந்த 28ம் திகதி கிண்ணியா தள வைத்தியசாலை பொறுப்பதிகாரி ஏ.எச்.எம். சமீமிடம் கையளித்தார். இதன் போது முதலமைச்சர் நிபுணத்துவமிக்க வைத்தியர்கள் தங்கி நின்று வைத்தியசேவையை வழங்குவதற்கு ஏற்ற வகையில் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.



நன்றி - பேஸ்புக்

## வாழ்த்துகின்றோம்

பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான ஆய்வு கூடப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாவதாக புனித மரியாள் கல்லூரி தெரிவு செய்யப்பட்டு “வித்தியா பிரபா“ விருதினை சுவீகரித்துக் கொண்டது. இதற்கு மாணவர்களை உற்சாகப்படுத்தி, விஞ்ஞானக் கூடத்தை அறிவு பூர்வமான முறையில் ஆயத்தம் செய்த ஆசிரியை திருமதி. ஜோன்பிள்ளை அவர்களை புனித மரியாள் கல்லூரியின் பழைய மாணவர்கள் நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி அதிபர் அருட்சகோதரி நிரோஷா முன்னிலையில் வழங்கி வைத்தனர்.



## செய்தித் துளிகள்

### குரங்குகளைக் கொல்ல துப்பாக்கி வேண்டும்

காத்தான்குடி நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் நூற்றுக்கணக்கானவர்-களைக் கடித்துக் காயப்படுத்தியும் சொத்துக்களுக்குச் சேதங்களையும் விளைவித்துவரும் கருங்குரங்குகளைக் கொல்வதற்குத் துப்பாக்கியொன்றைக் கொள்வனவு செய்ய அனுமதிக்குமாறு பாதகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

### கட்டுரைப் போட்டி

வாணிவிழாவை முன்னிட்டு லேக்ஹவுஸ் இந்து மன்றம் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை அறிவித்துள்ளது. தரம் 9-11 வரையான கீழ்ப்பிரிவினரிடையே இந்து மதமும் மனித நேயமும், பண்டிகைகள் கூறும் வாழ்வியல் பண்புகள் ஆகிய தலைப்புக்களிலும் , தரம் 12-13 வரையான மேல்பிரிவு மாணவர் களிடையே ஆலய வழிபாடும் ஆன்மீக நன்மைகளும், சைவசமய சமூக மறுமலர்ச்சிக்கு ஆறுமுக நாவலரின் பங்களிப்பு என்ற தலைப்பிலும் 1500 மேற்படாத சொற்களில் இக்கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளது.

தாளின் ஒரு பக்கத்தில் வரையப்பட வேண்டிய கட்டுரைகளை 05.09.2014ற்கு முன் The Secretary, The Hindu Association of Lake House, Thinakaran Editorial,Lake House, Colombo - 10 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

### ஆயுதங்கள் மீட்பு

துப்பொன்றின் அடிப்படையில் ஈச்சிலம்பற்றில் இருந்து கட்டுத் துவக்கொன்றையும் கிளிவெட்டியில் இருந்து இரண்டு கைக்குண்டுகளையும் படையினர் மீட்டுள்ளனர். எவரும் கைதாகவில்லை.

### வேக அளவீட்டு மானி இப்போதைக்கு இல்லை



வேகக் கட்டுப்பாட்டு அறிவித்தல் பலகைகளை பெருந் தெருக்களிற் பொருத்தும் வரைக்கும் வேகக் கட்டுப்பாட்டு மானியைக் காவல்துறை பாவிக்க இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதிவேக மோட்டார் சாரதிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஆதாரமாக வேகக் கட்டுப்பாட்டு மானியின் வாசிப்பையே இதுவரைகாலமும் பிரதான தடயமாக காவல்துறை பேணியது.

எனினும் 09.06.2014ம் திகதியிடப்பட்ட E/11/2014ம் இலக்க அறிவுறுத்தலானது வீதிகளில் வேகத்தைக் குறிக்கும் அறிவித்தற் பலகைகள் இடப்படும் வரைக்கும் வேகமானியைப் பாவிப்பதைத் தற்காலிகமாகத் தடை செய்துள்ளது.

### யானைத் தாக்குதலில் பெண் பலி

திருகோணமலை குச்சவெளி பகுதியில் காட்டு யானை தாக்கி, பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டிற்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் நேற்று மாலை விறகு வெட்டுவதற்காக சென்றபோதே இந்த பெண்ணை காட்டு யானை தாக்கியதாக காவல்துறை குறிப்பிடுகின்றனர்.

திரியாய் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாய் ஒருவரே யானை தாக்கியதில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் அயலவர்களால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்து உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## Sunday Times

### 'போதைப் பொருளுக்கான யுத்தம் – ஐ.நா வுடன் கூட்டுச்சேர்க்கை




போதைப் பொருள் கடல் வழியாக கடத்தும் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் இலங்கை போதை பொருள் கடத்தலின் மையப்புள்ளியாக உருவாகி வருவதை தடுக்கும் நோக்குடன் ஐ.நா வின் போதைப் பொருள் மற்றும் குற்ற அமைப்புடன் ஒப்பந்தமொன்றை இலங்கை மேற்கொண்டுள்ளது. இவ் ஒப்பந்தப்படி சர்வதேச நாடுகளின் கடற்படையுடன் இணைந்து இலங்கைக்குள் வரும் போதைப் பொருளை தடுக்கும் தந்திரோபாயத்தை ஐ.நா அமைப்பு உருவாக்கவுள்ளது. இந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் ஐ.நா அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் ஊடாக சர்வதேச அரசுகளுடன் இணைந்து போதைப் பொருள் கடத்தலை இலங்கை கடற்பரப்பில் வைத்துத் தடுப்பதற்கான வாய்ப்புக்கள் கண்டறியப்பட்டுள்ளது.

### அவுஸ்திரேலியாவினால் கைவிடப்பட்ட எம்பிலிபிட்டிய காகித ஆலை

2011 ஆம் ஆண்டில் அமைச்சரின் அனுமதியுடன் அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றுக்கு 30 வருட குத்தகைக்கு விடப்பட்ட எம்பிலிபிட்டிய காகித ஆலையை அந்நிறுவனம் கைவிட்டுள்ளது. 400 மில்லியன் ஒப்பந்தத் தொகை கொண்ட இவ் ஒப்பந்தம் முறையற்ற விதத்தில் கைவிடப்பட்டுள்ளதாகவும், செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், இவ்விடயத்தை அரச நிறுவன அபிவிருத்தி அமைச்சு தெரிந்து கொள்ளவில்லை எனவும் தெரிகிறது. அவ்வாலையில் உள்ள இயந்திரங்கள் உள்நாட்டு வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட குத்தகையூடாகவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இக்குத்தகைக்கான பணம் செலுத்தப்படாத நிலையில் அவ்வியந்திரங்களை வங்கி ஏல விற்பனையில் விற்க முனைந்த போதே இவ்விபரம் வெளிப்படையாக தெரிய வந்தது. அதையடுத்து சிவில் பாதுகாப்பு படையினர் அவ் ஆலையின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

### பியர் உற்பத்திக்கான அரிசிக்கு தடையில்லை.

பியர் உற்பத்திக்கு அரிசியை கொள்வனவு செய்வதற்கு எவ்வித தடைகளையும் அரசு விதிக்காதென அரசு முடிவெடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். இரண்டு வருடங்களுக்கு முன் மேலதிகமாக இருந்த அரிசியை வடிசாலை நிறுவனங்கள் கொள்வனவு செய்ய ஊக்கப்படுத்தியதாக அமைச்சர் தெரிவித்தார். தற்போது அதிகரித்துள்ள அரிசி விலையில் வடிசாலை நிறுவனங்கள் கொள்வனவு செய்வதால் அந்நிறுவனங்களின் செலவு அதிகரித்துள்ளதால் வடிசாலை நிறுவனங்கள் வேறு உள்ளீடுகளுக்கு தாவியுள்ளன என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஞரனெயல வுஅைநள ஆராய்ச்சியின் ஊடாக வடிசாலை நிறுவனங்கள் சந்தை விலையை விட அதிகரித்த விலையில் உள்நாட்டில் அரிசியைக் கொள்வனவு செய்ததால் அரிசிக்கெழுந்துள்ள போட்டித்தன்மையை அடுத்து சிறு மற்றும் நடுத்தர மில் உரிமையாளர்கள் சந்தையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.



### வீரகொற்றியவில் 67வது சுதந்திர தினம்

இலங்கையின் 67வது சுதந்திர தினத்தை தனது மூதாதையரின் ஊரான வீ கொற்றியவில் கொண்டாட ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக பிரதம மந்திரியின் தலைமையில் 12 அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைச்சரவை உருவாக்கியுள்ளது.

### மீனவர் பிரச்சனை சுவாமியின் தற்காலிக அனுமதி நிராகரிப்பு



இந்திய மீனவர் இலங்கைக்குள் நுழையும் பிரச்சனையை தற்காலிகமாக தீர்ப்பதற்கு சுப்ரமணியம் சுவாமியால் முன்வைக்கப்பட்ட தற்காலிக அனுமதிப் பத்திரம் தொடர்பான ஆலோசனையை இலங்கையின் மீன்வள அமைச்சர் நிராகரித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக தனியாக எவருமே முடிவெடுக்க முடியாதென மீன்வளத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார்

இந்தியக் கரையோரத்தில் இந்திய மீனவர்கள் மேற்கொண்ட பொறுப்பற்ற நடவடிக்கைகளால் நல்ல மீன்வளம் அழிந்துவிட்டதென தெரிவித்த சுவாமி, தமது பக்கத்தில் [illegible] அடுத்துவரும் மூன்றாண்டு காலப்பகுதிக்கு இலங்கையின் பக்கத்தில் [illegible] அவர் கோரியுள்ளார்.

## Sunday Observer

### கிழக்காசியாவிலேயே இலங்கையில் தான் பெற்றோலிய விலை குறைவு – அமைச்சர்




இலங்கையிலேயே பெற்றோலியப் பொருட்களுக்கான விலை குறைவாக உள்ளதென அமைச்சர் அனுரபிரியதர்ச யாப்பா தெரிவித்துள்ளார். சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் பரலின் விலை 100 டொலரில் இருந்து 110 டொலர் வரை இருக்குமாயின் உள்நாட்டு சந்தையில் பெற்றோலிய பொருட்களின் விலை அதிகரிக்காது என அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

### வான் தள – துறைமுகங்களில் எபோலோ பாதுகாப்பு



சந்தேகத்துக்குரிய மேற்காபிரிக்க நாடுகளில் இருந்து எவோலோ வைரஸ் தொற்றுக்குள்ளானோர் இலங்கைக்குள் நுழைவதைத் தடுக்கும் கண்காணிப்புக்கள் வத்தை மற்றும் ஏனைய துறைமுகங்களுக்கும் விஸ்தரிக்கப் படுமென சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குள் எவோலோவைக் கடத்தும் வாய்ப்புக்கள் குறைவாக இருந்தால் கூட எவோலோ வைரஸ் 2 - 21 நாட்களுக்குள் இனங்காணப்பட்டு விடுவதால் இலங்கைக்குள் வரும் கப்பல்கள் அதைவிட கூடிய நாட்களின் பின்னே குறித்த ஆபிரிக்க நாடுகளில் இருந்து வந்து சேரும் என்பதால் எபோலோவை கண்டு கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்குமென அமைச்சர் தெரிவித்தார்.

### சுயபலம் இல்லை – நிமால் ஸ்ரீபால டி சில்வா

சுயபலம் கொண்ட தலைவர்கள் ஐக்கிய தேசிய கட்சியில் இல்லை என்கிறார் நிமால் ஸ்ரீபால டி சில்வா.



சிறந்த சுயபலம் கொண்ட வேட்பாளர் ஒருவர் ஐ.தே.க யில் இல்லை எனவும், நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது தவறு என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

### போராளிகளின் புனர்வாழ்வு – இலங்கை ஓர் எடுத்துக்காட்டு

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட போராளிகளின் புனர்வாழ்வுத் திட்டமானது ஏனைய உலக நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என பேராசிரியர் ரொகான் குணரத்தின தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நாடுமே போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து மக்களுடன் இணைக்க வில்லை எனத் தெரிவித்த அவர் நான்கு வருடங்களில் 11,700 போரராளிகள் சமூகத்துடன் மீள் இணைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

## Sunday Leader

### சர்வதேச முஸ்லீம் போராளிகளுடன் தொடர்புபட சில முயற்சி



விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் சில குழுக்கள் சுய பாதுகாப்பு என்ற போர்வையில் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சிப்பதாக பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார். இந்நடவடிக்கையினால் அக்குழுக்கள் மீது தந்திரோபாய கண்காணிப்பு தேவைப்படுவதாக தெரிவித்த அவர் போரின் பின் இனக்குழுக்களிடையே உருவாகி வரும் இடதுசாரிக் கொள்கை கவனிக்கப்படாது விட்டால் இனங்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்திவிடும் என அவர் தெரிவித்தார்

### அமெரிக்க ஊடகவியலாளரின் விசா விண்ணப்பம் கிடப்பில்!




புதுடில்லியில் உள்ள அமெரிக்க ஊடகவியலாளர் ஒருவரால் இலங்கைக்குள் வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட விசா விண்ணப்பம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. அமெரிக்க ஊடகவியலாளர் ஒருவர் இலங்கைக்குள் வருவதற்கு இது பொருத்தமான நேரம் அல்லவென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. The Newyork Times என்ற பத்திரிகையின் கிழக்காசிய ஊடகவியலாளரான கார்டன ஹரிஸ் கடந்த யூன் மாதம் தான் இலங்கைக்கு வருவதற்காக விண்ணப்பித்திருந்த போதும் தற்போது வரை தனக்கு பதிலெதுவும் கிடைக்கவில்லை என twitter இல் எழுதியுள்ளார்

### 31 பேரிடம் சட்டவிரோதி ஆயுதம்




இலங்கையில் 31 பேரிடம் சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து இரண்டு சுற்றிவளைப்புக்களை காவல்துறை மேற்கொண்டுள்ளதாக காவல்துறை அறிவித்துள்ளது. கொழும்பிலும் ஏனைய பகுதியிலும் அடுத்தடுத்து ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களையடுத்து சட்ட விரோத ஆயுதங்களை பலர் தம்வசம் வைத்திருப்பதாக தமக்கு செய்தி கிடைத்ததாகவும் அதையடுத்து 80 புலனாய்வாளர்கள் பதிவு செய்யப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான மீள்பார்வை மேற்கொள்வதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

### சிரியாவில் 191,000 பேருக்கு மேல் மரணம்

சிரியாவில் தாக்குதல் தொடங்கி இந்த வருடம் ஏப்ரல் மாதம் வரை சுமார் 191,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணையர் தெரிவித்துள்ளார். இத்தொகை உண்மையிலேயே குறைத்து மதிப்பிடப் பட்டிருக்கலாம் எனத் தெரிவித்த அவர் சிலவேளை இத்தொகை இரட்டிப்பாகலாம் எனத் தெரிவித்தார்.

### 157 பேரின் வழக்கு ஒக்டோபரில்

அவுஸ்திரேலிய உயர்நீதிமன்றமானது ஒக்டோபர் மாதத்தில் விசேட அமர்வொன்றை கடலில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்கள் தொடர்பில் நடத்தவுள்ளது. சர்வதேச கடற்பரப்பில் வைத்து தஞ்சம் கோருவோரை கைது செய்து தடுத்து வைக்கும் உரிமை கொமன் வெல்த் நாடுகளுக்கு உண்டா என ஆராயும் பொருட்டே அந்த அமர்வு நடாத்தப்படவுள்ளது. அபொட்டின் அரசாங்கத்திற்கு சர்வதேச கடற்பரப்பில் வைத்து 157 பேர் தஞ்சம் கோருவோரை கைது செய்யவும் அவர்களை அவுஸ்திரேலிய கடல் எல்லைக்கு அப்பால் வைத்து அவுஸ்திரேலிய கடற்தளத்திற்கு மாற்றவும் பின்னர் அவர்கள இந்தியாவிற்கு திருப்பியனுப்பவும் உரிமை உண்டா என்பதை இவ் அமர்வின் போது அவுஸ்திரேலிய நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனாதிபதிக்காக காத்திருக்கும் வெற்றியும் தோல்வியும்!!



அரசியல் ஆய்வு

புருஜோத்தமன் தங்கமயில்
தமிழ்மிரர் (www.tamil.dailymirro.lk)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நெருக்கடியான காலகட்டத்துக்குள் இருக்கிறார். ஐக்கிய நாடுகளின் விசாரணை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசுக்கு எதிரான அல்லது அடங்கா அரசியல் முன்னெடுப்புக்கள், இந்தியாவோடு இன்னும் இன்னும் நெருக்கத்தை விரும்பினாலும் மோடி அரசாங்கம் வெளிப்படுத்தும் பெரியண்ணன் மனநிலை உள்ளிட்டவற்றை (தற்போதைய) நீண்டகால நெருக்கடியாக மஹிந்த ராஜபக்ஷ உணர்க்கிறார்.

அவரின் இரண்டாவது ஜனாதிபதி பதவிக்காலம் முடிவுற்று மூன்றாவது பதவிக்காலம் நோக்கிய பயணத்திலும், அந்த நெருக்கடிகள் சூழ்ந்து கொண்டு நிம்மதியற்ற நிலையை ஏற்படுத்தப் போகின்றது. அதை, அவர் உணர்ந்தே வைத்திருக்கிறார்.

இலங்கையின் அரசியல் சூழ்நிலை என்பது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு முன்னால் அவ்வளவு பலமாக இருந்ததில்லை. அதாவது, அரசாங்கமோ, எதிர்க்கட்சிகளோ ஜனாதிபதி என்கிற பதவிக்கு முன்னால் மிகவும் மட்டுறுத்தப்பட்ட பலத்துடனேயே இருக்கின்றன.

அதிகாரங்களின் மொத்த இருப்பிடமாக "நிறைவேற்று அதிகார ஜனாதிபதி" முறைமை இருக்கின்றது. நிறைவேற்று அதிகாரத்தினை வரைந்து அங்கீகரித்த நாடாளுமன்றத்தின் நிலை கூட பல நேரங்களில் செல்லாக்காசாகி விடுகிறது.

அப்படிப்பட்ட அதிகாரங்களுக்கான ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டின் முதற்பகுதியில் நடத்தப்படலாம் என்கிற நம்பிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அதை, அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களும் அவ்வப்போது உறுதிப்படுத்தி வருகின்றனர்.

இரண்டு தடவைகளுக்கு மேலாக ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும் என்கிற அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டதன் பின், ஜனாதிபதியாக வருகின்ற நபரை எதிர்த்து அவர் அங்கம் வகிக்கும் கட்சிக்குள் இன்னொருவர் வளர்வது என்பது சாத்தியமே இல்லாதது.

அப்படியான நிலையில் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார்.

அது, அவரின் மூன்றாம் கட்ட ஜனாதிபதி பயணத்துக்கான ஆரம்பமாக இருக்கும். அதை, இலங்கை மக்கள் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஏனெனில், மஹிந்த ராஜபக்ஷவை அரசியல் ரீதியாக வீழ்த்தக் கூடிய சக்தியொன்று தற்போது இல்லை.

சீரான அரசாங்கமொன்று நாடொன்றின் வளர்ச்சியிலும், முன்னோக்கிய பயணத்திலும் எவ்வளவு முக்கியமோ, அதேயளவுக்கு பலமான எதிர்க்கட்சியொன்றின் தேவையும் அவசியமானது. ஆனால், துரதிஷ்டவசமாக இலங்கை பலமான எதிர்க்கட்சியொன்றைக் கொண்டிருக்கவில்லை.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினால் பல நேரங்களில் எந்தவித அவதானத்தையும் பெற முடிவதில்லை. பெயரளவிலான எதிர்க்கட்சியாக மட்டுமே வலம் வந்து கொண்டிருக்கிறது.

ஆனால், எதிர்க்கட்சிகளின் வரிசையின் இரண்டாவது பெரிய கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவ்வப்போது கடுக்காய்களைக் கொடுக்கிறது. அது, அவரை கோபத்தின் உச்சத்தில் கொண்டு சேர்க்கிறது. ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்ற பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்கு பற்றி ஊடகங்கள் தொடர்ச்சியாக செய்திகள் வெளியிட்டு வந்திருக்கின்றன.

அதாவது, மஹிந்த ராஜபக்ஷ 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எதிர்கொண்ட முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில், தமிழ் மக்கள் வாக்கெடுப்பை புறக்கணித்ததன் மூலம் வெற்றியைப் பெற்றார் என்பது. ஏனெனில், தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை அடுத்து அந்தத் தேர்தலை வடக்கு தமிழ் மக்கள் புறக்கணித்திருந்தனர். அப்படியான சந்தர்ப்பமொன்றிலேயே ரணில் விக்ரமசிங்கவை சுமார் 190,000 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் வெற்றி கொண்டிருந்தார்.

அவரின் இரண்டாவது ஜனாதிபதி பதவிக் காலத்துக்கான தேர்தலின் வெற்றியில் "தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்" அழிக்கப்பட்டது மாத்திரமே காரணமாக அமைந்தது. 30 வருடங்களாக கோலோச்சி வந்த விடுதலைப் புலிகளை சர்வதேசத்தின் ஆதரவோடு 2009, மே மாதத்தோடு முற்றுமுழுதாக அழித்து நாட்டை ஒருமைப்படுத்திய தலைவர் என்ற பிம்பம் சிங்கள மக்களிடம் இன்னமும் இருக்கின்றது.
நாட்டில் தொடரும் சீரற்ற ஆட்சி தொடர்பில் இருக்கின்ற அதிருப்தியைத் தாண்டும் அளவுக்கு மஹிந்த ராஜபக்ஷ மீதான அபிமானமும், நாட்டை பாதுகாத்த தலைவர் என்ற பிம்பமும் சிங்கள பெரும்பான்மை மக்களிடம் உண்டு. அதை, இன்னமும் தக்க வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது.
அந்த நடவடிக்கைகளின் போக்கில் அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் விசாரணையையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசிற்கு எதிரான போக்கையும் முன்வைக்கின்றன. (அதைத்தாண்டி இனக்குரோத-முரண்பாடுகள் நாட்டுக்குள் தோற்றுவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் உண்டு. அவை தொடர்பில் இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்)

இறுதி மோதல்களின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை மீது ஐக்கிய நாடுகள் முன்னெடுத்துள்ள விசாரணைகள் என்பது மஹிந்த ராஜபக்ஷவிற்கு இன்னும் சில ஆண்டுகளுக்கு சிக்கலை ஏற்படுத்தப்போகின்றது.
இறுதி மோதல்களின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்களில், மோதலில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையி லேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால், மோதல்களில் ஈடுபட்ட தரப்பில் ஒருதரப்பான விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்ட பின், விசாரணைகள் என்பது இன்னொரு தரப்பான இலங்கை அரசினை நோக்கிய அழுத்தங்களை அதிகமாக வழங்கும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை மார்ச் மாத கூட்டத் தொடர்களில் இலங்கை மீதான பிரேரணை வைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கம் அதை குறிப்பிட்டளவு சமாளித்து வெற்றி கொண்டு விடலாம் என்று நம்பியது.

ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் ஆளுமை மிக்க திட்டங்களின் முன் அவ்வளவு வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எவ்வளவு திருத்தங்கள் செய்யப்பட்டாலும், இறுதியில் இலங்கை ஐக்கிய நாடுகளின் விசாரணையை எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த விசாரணைகள் எதிர்வரும் ஆண்டுகளில் மஹிந்த ராஜபக்ஷ தலைமைக்கு சர்வதேச ரீதியில் குறிப்பிட்டள வான இடையூறுகளை ஏற்படுத்தும்.
ஆனால், ஐக்கிய நாடுகளின் விசாரணையை சிங்கள பெரும்பான்மை மக்களிடம் காட்டியே தன்னுடைய வெற்றியை மஹிந்த ராஜபக்ஷ தக்க வைத்துக் கொள்ளுவார்.

நாட்டை ஒருங்கிணைத்த தங்களது தலைவரை சர்வதேசம் தண்டிக்க அனுமதிக்கக் கூடாது என்கிற கோஷம் அல்லது ஊடுருவும் உணர்ச்சியூட்டப்பட்ட மனநிலை என்பது எதிர்த்தரப்பு வேட்பாளரை கண்டு கொள்ள அனுமதிக்காது.

ஒருமித்த இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வே நாங்கள் எதிர்பார்க்கும் தீர்வு என்று உயர்நீதிமன்றத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துவிட்ட போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் குறித்து சிங்கள பெரும்பான்மை மக்களிடம் நம்பிக்கை இன்னமும் வரவில்லை.

தமிழ் மக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் விடுதலைப் புலிகளின் பிரதிபலிப்பாக உணரும் சிங்கள மக்களும், அவர்களை அப்படியான மனநிலையிலேயே வைத்திருக்கும் இனவாத அரசியலும் தென்னிலங்கையில் தொடர்கின்றது. அப்படியான அரசியலொன்று தொடர்ச்சியாக தங்களை ஆட்சிபீடத்தில் வைத்திருக்கும் என்று நாட்டின் பிரதான கட்சிகள் நம்புகின்றன.

அப்படியானதொரு நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசாங்கத்துடனான மோதல் போக்கு கொண்ட அரசியல் என்பது மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி தேர்தலில் வாக்குகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உந்துசக்தியாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் மக்களும் இன்னமும் பிரிவினைக் கோஷங்களோடு இருக்கிறார்கள் என்கிற உருவகம் சிங்கள மக்களிடம் கொண்டு சேர்க்கப் பட்டுள்ளது. அது, தொடர்கிறது. ஐக்கிய நாடுகளின் விசாரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கும் என்ற அறிவிப்பும் அதன் போக்கிலேயே கொண்டு செல்லப்படுகின்றது.

தான் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகமொன்றுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தீர்வு கோரும் நடவடிக்கை களின் போக்கிலேயே ஐக்கிய நாடுகளின் விசாரணைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கின்றது என்கிற அடிப்படை தொடர்பில் யாரும் சிந்திக்க அனுமதிக்கப்படுவதில்லை. மாறாக, புலம்பெயர் புலிகள், ஐக்கிய நாடுகளுக்குள் இருக்கும் புலிகள், வடக்கிலுள்ள புலிகள் என்கிற வரையறைகள் முன்வைக்கப்பட்டு சிங்கள மக்களின் மனதில் புலிகள் தொடர்பிலுள்ள வெறுப்பை தங்களுடைய வெற்றியாக அறுவடை செய்யப்போகிறது அரசாங்கம். அதற்கான களங்கள் எப்போதும் திறந்தேயிருக்கின்றன.
மஹிந்த ராஜபக்ஷவின் மூன்றாவது ஜனாதிபதி பதவிக் காலத்துக்கான வெற்றியிலும் விடுதலைப் புலிகள் என்ற பங்கு எப்படியோ வந்து சேர்ந்துவிடும். இன்னொரு பக்கம் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்கு நாடுகளைக் காட்டி சிங்கள மக்களின் மனதை அரசாங்கத்தோடு வைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை அரசாங்கத்தி லுள்ள அடிப்படைவாதக் கட்சிகள் முன்னெடுக்கின்றன.
இலங்கையில் ஆட்சி மாற்றத்தைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலேயே மேற்கு நாடுகள் ஈடுபடுகின்றன என்ற அரசாங்கத்தின் குற்றச்சாட்டு சிங்கள மக்களிடம் பெருமளவு எடுபடும். அடிப்படையிலேயே மேற்கு நாடுகள் குறித்த எதிர்நிலை மனப்பான்மை என்பது இலங்கையில் வெற்றியைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது.

அதுதான், ரணில் விக்ரமசிங்களை அதிக தோல்விகளைக் காண வைத்த காரணங்களுக்குள் ஒன்றாகவும் இருக்கின்றது. ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெல்வதற்கான பிரதான காரணங்களாக இவையிருக் கின்றன. இவற்றை எதிர்கொண்டு வெற்றி கொள்வதற்கு எதிர்க்கட்சிகளினால் அவ்வளவுக்கு முடியாது. ஆனால், அரசாங்கத்தின் ஆட்சி மீதான அதிருப்தி என்பது சிங்கள மக்களிடத்திலும் உண்டு. அதனை பெருமெடுப்பில் உருமாற்றும் திறனை எதிர்க்கட்சிகள் கொண்டிருக்க வில்லை. குற்றச்சாட்டுக்கள் அளவோடு எதிர்க்கட்சிகள் ஒதுங்கி விடுகின்றன.

ஆனால், அவற்றை மக்களிடம் நெருக்கத்தில் சென்று வெற்றிக்கான வழியாக பாவிக்கும் செயற்திறன் அற்று இருக்கின்றன. ஆக, ஆட்சியின் மீதான அதிருப்தி என்பது இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியை மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து பறிக்கும் காரணியாக இருந்து விடாது. இப்படியான நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களே அதிகம். ஆனால், அதன் பின்னர் அவரின் ஆட்சி எதிர்கொள்ளப் போகும் சிக்கல்கள் என்பது பெரும் தலையிடியாக இருக்கும்.

ஐக்கிய நாடுகள் விசாரணைகளின் பின்னரான அறிக்கை. அது, (பெரியளவில் இல்லாவிட்டாலும்) விளைவிக்கப் போகும் இடைஞ்சல்கள் நீள்வதற்கான வாய்ப்புகள் அதிகம். இன்னொரு பக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரப்பகிர்வுக்கான கோரிக்கை அல்லது ஜனாதிபதியின் அழுத்தங்களைக் கண்டு கொள்ளாத மனநிலை அடக்கியாள முடியாததாக இருக்கும்.

இங்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயமொன்று இருக்கின்றது. அதாவது, இலங்கையை சர்வதேச ரீதியில் சிக்கல்களுக்கும் தள்ளும் நிலையை இந்தியா வெளிப்படுத்தாது. ஆனால், தன்னுடைய கட்டுப்பாட்டுக்கள் வைத்திருக்கும் முயற்சிகளை அது மேற்கொள்கின்றதோ என்ற எண்ணம் மேலேழுகிறது. ஏனெனில், காங்கிரஸ் தலைமையிலான (இந்திய மத்திய) அரசாங்கம் கொண்டிருந்த நெருக்கத்தை, தற்போதைய மோடி தலைமையிலான அரசாங்கம் பதவியேற்று சில மாதங்கள் ஆகியுள்ள நிலையில் பெரிதாக வெளிப்படுத்தவில்லை.

மாறாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்து சந்தித்து இலங்கை அரசாங்கத்தை சங்கடப்படுத்தியிருக்கிறது. அதுபோக, மோடியை இலங்கைக்கு வருமாறு அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட அழைப்புக்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் இன்னமும் பதிலளிக்கவில்லை.

இவ்வாறான நிலைகளைப் பார்க்கின்ற போது, இன்னும் சில வருடங்களுக்கு இலங்கையை பெரியண்ணன் மனநிலையோடு இந்தியா கையாள முயலும் என்பதை எதிர்பார்க்கலாம். அது, மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றியின் பின்னரான இடையூறுகளில் ஒன்றாக இருக்கும். ஆக, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் வெற்றி பெற்றாலும், சர்வதேச ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அவரின் செயற்பாடுகள் அமையப் போகின்றன.

உள்நாட்டுக்குள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரங்களைக் கோரப்போகின்றது. இன்னொரு பக்கம் இந்தியாவின் அணுகுமுறை என்பன சேர்ந்து வெற்றியை அவ்வளவுக்கு அனுபவிக்க விடாது தள்ளாட வைக்கப் போகின்றது. ஆக, மஹிந்த ராஜபக்ஷவுக்கு காத்திருக்கும் வெற்றி அவ்வளவு அமுதங்களை வழங்கிவிட வாய்ப்பில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - நல்லதே செய் நல்லதே நடக்கும் -

- பாலையூற்றான் -

... நாட்டு நடப்பு...

எமது நாட்டில் இன விரிசலினால் பல தடவைகள் பலவிதமான வன் செயல்கள் இடம்பெற்றுள்ளதுடன் அவை ஒன்றை விட ஒன்று மிஞ்சியதாகவே காணக்கூடியதாக இருந்துள்ளன. இந்த நாட்டை ஆட்சி செய்த சகல அரசியல் கட்சிகளின் நிர்வாக காலங்களில் ஏட்டிக்குப் போட்டியாகவே வன் செயல்கள் இடம்பெற்றுள்ளன என்பதனை கோடிட்டுக் கூறலாம்.

எந்தவொரு அரசியல் கட்சியும் தனது ஆட்சிக் காலத்தில் எதுவித வன்செயலும் இடம்பெறவில்லை என மார்பு தட்டி கூறமுடியாது. 1983ம் ஆண்டு நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற அந்த வன்செயல் எவருக்கும் எளிதில் மறக்கக் கூடியதானதல்ல.


அன்று அந்த வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களில் பலர் இன்று கூட தலைநிமிர முடியாத நிலையிலுள்ளனர். அடிக்கு மேல் அடி வேண்டியதால், பெரும் பணவசதியுடன் வாழ்ந்தவர்கள் கூட இன்று நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டனர். நம் நாட்டிற்காக கோடிக்கணக்கில் பணத்தை முதலீடு செய்தவர்கள் 'பிச்சை வேண்டாம் நாயை பிடி' என்பது போன்று தங்களது வியாபாரங்கள், தொழிலகங்கள் அனைத்தையும் இழுத்து மூடிவிட்டு வெளிநாடுகளில் பணத்தை முதலீடு செய்துள்ளார்கள்.

அந்த வன்செயல் காலத்தில் செல்வந்தர்கள் மாத்திரமல்ல நடுத்தர வகுப்பினர்களும் அன்றாடம் உழைத்து வாழும் ஏழை எளிய மக்களும் பாதிக்கப்பட்டனர். அக்கால வன் செயல்களில் பெரும்பான்மையினர் பெரிதாக பாதிக்கப்படவில்லை. ஆனால் 1990ம் ஆண்டிற்கு பின்னர் புலிகளின் போராட்ட நடவடிக்கையினால் பெரும்பான்மையினரும் பாதிப்புக்குள்ளாகினர் என்பதனை சுட்டிக்காட்டத் தான் வேண்டும்.

அவன் கிழக்கு மாகாணத்தை சார்ந்தவன். 1983ம் ஆண்டில் இடம்பெற்ற கொடூர வன்செயலின் நிமித்தம் பெற்றோரையும், தனது சகோதரர்களையும் இழந்து தனிமரமானான். தனது பிறப்பிடமான கிழக்கு மாகாணத்தை முற்றாக கைவிட்டு மலையகத்தின் கந்தப்பளை எனும் பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாக்கிக் கொண்டான். அவன் அங்கு செல்லக் காரணம் தொழிலின் நிமித்தமே.

அவன் தனது சொந்தக் கதையையும், சோகக் கதையையும் கூற இந்தப் பண்ணையார் தனது பண்ணையில் அவனை வேலைக்கு சேர்த்துக் கொண்டார். அவரும் நீண்டகாலமாக வெளி மாவட்டத்தை சார்ந்த ஒரு திடகாத்திரமான இளைஞன் ஒருவனையே தனது பண்ணை வேலைகளுக்காக தேடிக் கொண்டிருந்தார்.

புரிந்து அவனும் தனக்கு வழங்கப்பட்ட சகல வேலைகளையும் மிகத் திருப்தியாக புரிந்து பண்ணையார் விரும்பும் வகையிலும் நடந்து கொண்டான்.



பண்ணையாருக்கு இருப்பதோ ஒரே ஒரு மகள். அவள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மாணவி. பண்ணையாரின் முழச் சொத்துக்கும் எதிர்கால அதிபதி அவளே. வாரத்தின் இறுதி நாட்களில் தவறாது அவளது சொந்த ஊரான கந்தபளைக்குச் செல்வாள். பம்பலபிட்டியிலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டிலேயே அவள் தங்கியுள்ளாள்.

பண்ணையார் தனது பண்ணைக்கு புதிதாக வேலைக்கு வந்தவனை தனது மகளுக்கு அறிமுகப்படுத்தி வைக்கத் தவறவில்லை. அவன் அவளை விட இரண்டு வயது குறைந்தவனாக இருந்தான். அது மாத்திரமல்ல அவனது பிரதேசத்தில் அடிக்கடி வன்முறை அனர்த்தங்கள் ஏற்பட்டதால் ஆறாம் ஆண்டுக்குப்பின் பள்ளிக்கூட வளவுக்குள் அவனால் அடி எடுத்து வைக்கக் கூட முடியவில்லை.

அவனது தகப்பனார் ஒரு விவசாயி. பொருளாதாரத்தில் முழுக்குடும்பமும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்ததால் அவனும் அவனது சகோதரர்களும், ஏனையோர் போன்று கல்வியை முழமையாக பெறமுடியாமல் போய்விட்டது. அன்றைய வன்செயலினால் முழக் குடும்பத்தினரையும் இழந்தபின் கல்வியில் அவனுக்கு நாட்டமே இருக்கவில்லை.

அதனால் தான் அவன் தொழிலொன்றை அவசரமாக தேடி கந்தப்பளைக்குச் சென்றிருந்தான். இன்று அவன் அங்கு சந்தோசமாகவும், நிம்மதியாகவும் வாழ்கின்றான். அவனுக்கு எவரினது தொந்தரவுகளும் அங்கில்லை. பண்ணையாரின் குடும்பத்தினர் அனைவரும் அவன் மேல் மிகவும் பாசமாக இருந்தனர்.

அவன் ஓர் அனாதை என்று எவரும் வேறுபாடு காட்டாத வகையில் பண்ணையாரின் குடும்பத்தில் தான் ஒரு முக்கிய பங்காளி என்ற உணர்வு அவனிடத்தில் மிக ஆழ வேரூண்டியிருந்தது. அப்பிரதேசத்திலுள்ளவர்கள் அவன் வெளி ஊரான் என்று கூட பேதம் காட்டாமல் அவனுடன் மிக அன்யோன்யமாக நெருங்கிப் பழகத் தொடங்கினர்.

பண்ணையார் வீட்டில் மாத்திரமல்ல கந்தப்பளை பிரதேசம் அமைந்துள்ள நுவரேலியா மாவட்டத்திலும் அவன் பலரால் கவரப்பட்டான். சிலர் அவனின் நடவடிக்கைகளை கண்டு அவன் பண்ணையாரின் தூரத்து உறவினராக இருக்கலாம் என யூகித்துக் கொள்ளவும் தவறவில்லை.

பண்ணையாரின் மகளின் திருமண வேலைகள் மிகவும் தடபுடலாக நடந்து கொண்டிருந்தன. பல்கலைக்கழக பட்டப் படிப்புகள் அனைத்தும் முடிவடைந்துள்ளதால் மகளின் திருமணத்தை ஜாம், ஜாம் .. என்று நடாத்துவதிலே மிகவும் மும்முரமாக ஈடுபட்டார் பண்ணையார். அவர் தனது மகளை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியது அவள் பட்டம் பெற்று பெரும்பதவியை வகிக்க வேண்டுமென்ற நோக்கிலல்ல.

அவள் கைநிறைய சம்பாதிக்க வேண்டுமென்ற அவாவும் அவரிடம் இருக்கவில்லை. ஏன்? அவளிடம் கூட அது இருக்கவில்லை. பல தலைமுறைக்கு தேவையான பணம் பண்ணையாரிடம் இருந்தது. கந்தப்பளை பிரதேசம் அவருடைய பிறப்பிடமுமல்ல. அது அவருடைய வசிப்பிடம் மட்டுமே.

அவருடைய பூர்வீகம் ஆரம்பிக்கப்பட்ட இடம் புதுக்குடியிருப்பாகும். அங்கு மாபெரும் கால்நடை பண்ணையை வைத்திருந்தார். யுத்த சூழல் காரணமாக சகல ஆதனங்களையும் அங்கு இழந்தார். வடக்கு, கிழக்கை விட தனக்கு மிகவும் பாதுகாப்பான இடம் நுவரெலியா மாவட்டத்திலுள்ள பிரதேசமான கந்தப்பளையில் குடும்பத்துடன் குடியேறி அப்பிரதேசத்திலே மிக குறுகிய காலத்தினுள் மா பெரும் பண்ணைக்கு அதிபதியுமாகி விட்டார். அவரை நம்பி பல குடும்பங்கள் அங்கு வாழ்ந்து வருவதை கூறாமல் இருக்கமுடியாது.

அவருக்கு மருமகனாக வரப்போறவன் கூட ஒரு பட்டதாரி. நடக்கவிருக்கும் திருமணம் ஒரு காதல் திருமணம். மகளின் விருப்பத்திற்கு எதிராக பண்ணையார் என்றுமே நடந்ததில்லை. பல்கலைக்கழகத்திற்கு படிக்கச் சென்ற போதுதான் பண்ணையாரின் மகளின் அந்த காதல் மலர்ந்தது. படிப்பு முடியும் வரை பண்ணையார் அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்க காத்திருந்தார்.

வரப்போகும் மருமகனின் குடும்பமும் மிக வசதியான குடும்பம். அவர்களின் சொந்த இருப்பிடம் தெஹிவளையாகும். இரு சாராரின் ஒருமித்த விருப்பத்தைக் கொண்ட இணக்கப்பாட்டிலே அந்த திருமணம் இடம்பெறுவதற்கான திருமண நாள் கூட குறிக்கப்பட்டது.

நுவரெலியாவிலுள்ள மிகப்பெரிய உல்லாச விடுதியிலே திருமணத்திற்கான சகல ஏற்பாடுகளும் இடம்பெற்றன. அது பெரிய இடத்து திருமணம் என்பதால், பல முக்கியஸ்தர்களால் உல்லாச விடுதி நிரம்பி வழிந்தது. ஆனால் மணமகன் உட்பட அவனின் வீட்டாரின் வருகையில் ஏதொ குளறுபடி காணப்பட்டதால் திருமண மண்டபம் சற்று சோர்ந்து காணப்பட்டது.

அங்கு திருமணத்திற்கு வருகை தந்தவர்கள் கூட பரபரப்பாக பலவற்றை ஆளுக்கால் மிக இரகசியமாக பரிமாறிக் கொண்டனர். அங்குள்ள சகலரினது முகங்களிலும் ஆச்சரிய குறிகள் தென்பட்டன. பூரண அமைதியின் மத்தியில் எப்படியோ குறித்த நேரத்தில் திருமணம் அம்மண்டபத்தில் இடம்பெற்றது. எவரும் எதிர்பாராத சம்பவம் ஒன்று அங்கு இடம்பெற்றதால் சகலரும் சம்பவத்தின் முழு விபரமும் தெரியாமல் மணமக்களை வாழ்த்தி கையில் கொண்டு வந்த பரிசுப் பொருட்களை வழங்கி விட்டு பலர் மதிய நேர உணவுடன் தத்தமது வீடு நோக்கி சென்றனர். அங்கு நடந்த குளறுபடிகளின் உண்மை நிலையை எவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

சகலரும் சென்ற பின் பண்ணையார், எதிர்பாராத அப்புதிய மணமகனை இறுகக் கட்டிப்பிடித்து ஆனந்த கண்ணீர் வடித்தார். அவர் மாத்திரமல்ல அவரின் முழக் குடும்பமும் அந்த மணமகனை வாழ்த்த தொடங்கியதுமல்லாமல் அவரின் துணிச்சலை வெகுவாக அங்குள்ளவர்கள் பாராட்டத் தவறவில்லை.

பண்ணையாரின் மகள் விரும்பிய அவளுக்காக நிச்சயிக்கப்பட்ட அந்த மணமகன் கிரடிக் காட் மோசடியில் அகப்பட்டு அன்று அவன் பொலிசாரால் கைது செய்யப்பட்ட பின்னர் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதே அங்கு இடம்பெற்ற பரபரப்புக்கு காரணம். எப்படியும் அத்திருமணத்திற்கான மாற்றுவழி ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மண்டபத்தில் அதை தெரிவிக்க முடியாத நிலையில் பண்ணையார் அத்திருமணம் நடைபெறும்வரை வேறு ஒரு இடத்தில் மறைவாக இருந்துவிட்டு தன் மகளுக்கு தாலிகட்டிய பின்னரே மண்டபத்திற்கு வந்திருந்தார்.

அந்த ஊரிலேயே அவர் பெரும் புள்ளி. தனது மகளின் திருமணம் தடைப்படுவதை அவரால் சகிக்கமுடியா தென்பதை அவரின் பண்ணையில் வேலை செய்யும் அந்த வெளியூர் இளைஞன் நன்கு புரிந்திருந்தான். எப்படியும் தனது பண்ணையாரின் கௌரவத்தை காப்பாற்ற அவன் துணிந்து எடுத்த முடிவு பண்ணையாரின் முழுக் குடும்ப கௌரவத்தையும் காப்பாற்றியது. தனது காதலன் திருட்டுப் பட்டத்தை சுமந்து கொண்டு மணமகனாக தாலி கட்டுவதைவிட தங்கள் குடும்பத்தில் பரிவும் பாசமும் கொண்ட ஒருவனுக்கு தாலி கட்ட கழுத்தை நீட்டுவது மிகவும் பொருத்தமானது என்பதை பண்ணையாரின் மகளின் முடிவு மிக துள்ளியமாக எடுத்துக்காட்டியது.






## இவ்வளவு காதலா

பிரிட்டனில் உள்ள Ascot என்ற பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் தனது கணவர் இறந்த பிறகு அவருடைய சாம்பலை வைரம் போன்ற ஒரு பொருளாக மாற்றி எப்பொழுதும் தன் கையிலேயே வைத்துள்ளார். இதனால் தன்னுடைய கணவர் தன்னுடன் இருப்பது போன்ற உணர்வு ஏற்படுவதாக அவர் நெகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

## அடப்பாவீங்களா!!

Missouri பகுதியை சேர்ந்த Alice Uden என்ற 75 வயது பெண் கடந்த 1970ஆம் ஆண்டு தனது கணவர் Ronald Holtz என்பவரை கொலை செய்து அருகில் உள்ள சுரங்கத்தில் பிணத்தை போட்டுவிட்டு ஒன்றும் தெரியாதது போல இருந்துள்ளார். தனது கணவரை காணவில்லை என்று அக்கம் பக்கத்தில்



உள்ளவர்களிடம் கூறி சமாளித்துள்ளார். மேலும் அதன்பின்னர் மூன்று பேர்களை திருமணம் செய்து சுக வாழ்க்கையில் இருந்த அவர் தற்போது நான்காவது கணவருடன் வாழ்ந்து கொண்டிருந்த நிலையில் போலீஸார் அவரை கைது செய்து ஆயுள் தண்டனை பெற்றுக்கொடுத்துள்ளனர்.

## தக்காளி சண்டை

ஸ்பெயின் நாட்டில் வெகு சிறப்பாக ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் தக்காளி வீசி எறிந்து சண்டையிடும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. இந்த நிகழ்ச்சியில் சுமார் 20 ஆயிரத்திற்கும்



மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த தக்காளி சண்டை நிகச்சிக்காக நல்ல பழுத்த தக்காளிகள் 125 டன்கள் வரவழைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிக எடை குழந்தை

சீன நாட்டிலேயே மிக அதிக எடையுடன் பிறந்த குழந்தையாக நேற்று பிறந்த குழந்தை ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த குழந்தை பிறக்கும்போது அதன் எடை 6.3 கிலோ என்பது குறிப்பிடத்தக்கது.



## நினைத்துப் பார்த்திருப்பாரா!!


சீனாவின் லெயி (Leye) மாகாணத்தை சேர்ந்த ஹோ (Ho age-50) என்ற நபர் தனது வீட்டை சீரமைக்கும் பணியை தானே மேற்கொண்டுள்ளார். அப்போது திடீரென இரும்பு



கம்பி ஒன்று அவரது வலது பக்க தலையில் குத்தி, இடது பக்கத்தின் வழியாக வெளியே வந்துள்ளது. இதனையடுத்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட அவர் அவசர சிகிச்சை பெற்று உயிர் தப்பியுள்ளார்.

## ஆற்றுப் பாலம்

பொதுவாக ஆற்றையோ, கடலையோ கடந்து செல்ல உதவிடுவது தான் பாலங்கள். ஆனால் ஜேர்மனியில் ஆற்றின் மேலேயே பிரம்மிப்பூட்டும் வகையில் நீர் பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மேலும் அந்த நீரப் பாலத்தின் மேலே படகு போக்குவரத்து நடைபெறுவது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் உள்ளது. உலகில் அமைந்துள்ள மிக நீளமான நீர்ப் பாலம் எனப் புகழ்பெற்ற இது மேக்டீபர்க் (Magdeburg) என்ற இடத்தில் அமைந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி தொடர்கதை

பாதசாரி

போன வருஷம் இதே மாதத்தில் காசி தற்கொலை செய்து கொண்டு பிழைத்து விட்டான். கல்யாணம் செய்து கொண்ட நான்காவது மாதம், சவர பிளேடால் கழுத்தை ஆழ அறுத்துக் கொண்டான். உறைந்த ரத்தப் படுக்கை மீது நினைவிழந்து கிடந்தவனை கதவை உடைத்துப் புகுந்து எடுத்து ஜி.எச். சில் அட்மிட் செய்தார்கள்.

ஊரில் நான்கு பேர் 'மறைலூஸ்' என்று கருதும் காசியைப் பற்றி எனக்கு அப்படி நினைக்க முடியவில்லை. எல்லோரையும் போல, தனக்கும் இந்த நான்கு பேருக்கும் இடையில் அப்ஸார்பரை பழுது பார்த்து சரியாக வைத்துக் கொள்ளமல், இவர்கள் உறவென்று மெச்சுகிற பாதையின் குண்டு குழிகளில் அடிபட்டுக் கொண்டிருக்கிறான் என்று தான் சொல்லத் தோன்றுகிறது.

நேற்று காசியிடமிருந்து கடிதம், காசுதான் சுதந்திரம் காசுதான் சுதந்திரம் காசுதான் சுதந்திரம் என்று ஸ்ரீராமஜெயம் மாதிரி இன்லேண்டு முழுக்க எழுதியிருக்கிறான். ஆறு மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பு போன போது ஒரு டீக்கடை வாசலில் காசியை யதேச்சையாக சந்தித்தேன். உணர்ச்சி முண்ட கைகளைப் பற்றிக் கொண்டான். தன்னோடு அதிக நேரம் இருக்க வேண்டுமென்று கெஞ்சினான். என் அப்பாவுக்கு அடுத்த நாள் வருஷாந்திரம். இரவுக்குள் என் கிராமம் போய்ச் சேர வேண்டியிருந்தது. சொன்னேன். வாடினான். சரி என்று பார்க் பக்கம் போனோம்.



எனக்கு வேலை ஏ து ம கிடைக்காமலிருந்த காலத்தில் யாரா வது என்னைப் பார்த்து இப்ப என்ன பண்றீங்க? என்று கேட்டால் சங்கடத்தில் கூசிப் போய் சமாளிப்பாக எதையாவது சொல்வேன். அந்த வேதனை தனிரகம். காசியிடம் அதே கேள்வியை பூடகமாக விட்டேன். அப்புறம்? இப்ப ... ஒரு நண்பனோடு சேர்ந்து, மருந்து மொத்த வியாபாரம் சின்னதாப்பண்றோம். அப்பாகிட்டே இனி ஒரு மாதிரியா தொடரும்.. கேட் பூட்டியிருந்தது. பார்க்கில் சுவரெட்டிக் குதித்து உள்ளே போனோம். மறைவான புல்வெளி தேடி உட்காரும்போது ஞாபகம் தட்டியது. சிகரெட் வாங்கவில்லை. இருக்கு என தன் சட்டை பையிலிருந்து சிகரெட், தீப்பெட்டி எடுத்துப் புல் மீது வைத்தான்.

வியாபார உலகம் ரொம்ப கஷ்டப்படுத்துது. நிறைய கேவலமான அனுபவங்கள். மறைமுகவரி மாதிரி மருந்து வியாபாரத்தில் மறைமுக பங்குதாரர்களா இருக்காங்க டாக்டர்ஸ். எப்படீனா, ஒரு டானிக் பாட்டில் பிரிஸ்கிரிப்ஷன் எழுத வைக்க, ஒரு டாக்டருக்கு மூணு ரூபா இலஞ்சம் தரணும். நூறு பாட்டில் டானிக் விக்க மாசம் முன்னூறு ரூபா இலஞ்சம்.. இதில்லாம பெரிய கம்பெனி மருந்துக்குன்னா, கம்பெனியே நேரடியாக அன்பளிப்பு டி.வி, கிரைண்டர், ஃப்ரிட்ஜ்னு.. குமட்டுதுடா குணா..

காசியின் முகத்துமேல் செல்லமாகப் புகை வளையங்களை ஊதிவிட்டேன். இதிலே எவ்வளவு நாள் தாக்குப் பிடிப்பேன்னு தெரியலை. பழையபடிதாண்டா இருக்கு குணா. அடுத்த வினாடி மேலே எடுத்த காலூன முடியலே. காசி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். அவனது சட்டைப் பைமீது சொத் தென வெள்ளையும் பழுப்பும் கலந்த எச்சம் தெறித்தது.

ஆனா முன்னமாதிரி என்னப் பிச்சு வீசி வாந்தியிலே புரட்டி ஆபாசப்படுத்திக்றதில்லேடா. கஷ்டப்பட்டு விழுங்கிக்கறேன். அப்பாவுக்காகத் தான். அவர் போயிட்டா என்ன ஆவேன்னு புரியலை. எதை ஆதாரமாக்கி இந்தப் பேய் மனசை சமாதானமா நடத்தப் போறேன்னே தெரியலடா...

காசியின் அப்பா, காசிக்கு ஒரு வயதாகியிருக்கும் போது மனைவியை இழந்தார். காசிக்கு நான்கு வயது மூத்த ஒரு அக்கா உண்டு. வேறு உடன்பிறப்பு இல்லை. காசியின் அப்பா இரண்டாவதாகத் திருமணம் செய்து கொள்ளவில்லை. குழந்தைகள் இரண்டோடு, காசியின் பெரியப்பா – தன் அண்ணன் - குடும்பத்தோடு ஒட்டிக் கொண்டு விட்டார். மில் வேலை, சாந்தமான குணம். அப்பா எப்படியிருக்கிறார் காசி? அப்பாவும் நானும் ஒரு வீட்லே இருக்கோம். அக்காவுக்கு வீட்லே பாதி பாகம் உயில் எழுதி வைச்சாச்சு. உயிலை கையில் குடுக்கலே. செவரு வெச்சு ரெண்டு பாகமாக்கியாச்சு வீடு வாசலை.. மச்சான் அவ்வளவா பிரச்னை இல்லை... அப்பா அக்கா வீட்லேதான் சாப்புட்டுக்கறார். எனக்கு பத்து நாளைக்கொரு ஓட்டல், பத்தே நாளுக்குள்ள எந்த ஓட்டலும் சலிச்சிருது.. முன்னூறு, முன்னூத்தம்பது மாசம் கிடைக்கும். ஆத்மாவை, மனசை, வயத்தை, உடம்பை எல்லாத்தையும் அதிலேதாங் கழுவணும்... பக்கத்தில் சிமெண்ட் பெஞ்சில் படுத்திருந்த நாய் எழுந்து உடலை உதறி சடசடத்தது.

நீ பெண்ணா இருந்திருக்கக் கூடாதான்னு தோணுது. சரியாகச் சொன்னா நீ பெண்ணா மாறிடக் கூடாதான்னு.. உன்னோட இருந்தா பாதுகாப்பா, தைரியமா இருக்குடா குணா. அறிவோட குத்தலைப் பொருட்படுத்தாம சொன்னா கடவுளோட மடியிலே இருக்கிற மாதிரி.. அதுவும் பெண்கடவுள். என்னால் ஒரு ஆணை கடவுளா கற்பனை செய்யவே முடியலே.. விளையாட்டு மைதானமா முள்ளுவேலி இல்லாத மனசு உனக்கு. இல்லடாகாசி, என்னோட மனசு உனக்கு அந்த மாதிரி இருக்குது. ஆனா அங்கேயும் சில பேர் கண்ணுக்கு வேலி இருக்கும். இருக்குது, சரி.. இப்பெல்லாம் ஏதாவது எழுதறயா?

இல்லே, டயரி மட்டு தான். கவிதை, கதைன்னு எழுதினா சுய புலம்பலா இருக்குது. எதிரில் நாய் ஒற்றைக் காலைத் தூக்கி பெஞ்ச் கால்மேல் மூத்திரம் அடித்தது. காசியின் வாயில் கால் சிகரெட் சாம்பலாக நின்றிருந்தது. சற்றே மௌனம். என்னால், இந்த சிகரெட்டை விடவே முடியலே காசி. நானுந்தான்.. கூடவே இந்த மாஸ்ட்ருபேஷனையும்.. எவ்வளவு முயற்சி பண்ணியும் இந்த ரெண்டையும் நிறுத்தவே முடியலேடா குணா. சிகரெட்டால் எனக்கு ஒண்ணுமேயில்லே.. நிகோடின் நெஞ்சுக்குள்ளே பரவி எதுவும் பண்றதா தெரியலே.. பால் வராத மொலக்காம்பை உறிஞ்சற மாதிரிதான் அது எனக்கு. மாஸ்ட்ருபேஷன்லேயும் ஒரு விஷயம். பல பேர் மாதிரி கைகொண்டு இல்லே. தலையணையை அணைச்சுட்டு... தாயான முப்பது முப்பத்தஞ்சு வயசுப் பொண்ணுகளத்தான் நினைவிலே அடைச்ச. காசிக்கு இருபத்தொன்பது தான் வயதென்று நினைக்கிறேன். திடீரென வேறேதாவது பொதுவாகப் பேசலாம் என்ற காசி, என்னைப் பற்றிக் கேட்டான். என் அம்மாவை விசாரித்தான். எனக்கும் அவனுக்கும் பழக்கமான ஒரு சாமியாரைப் பற்றிக் கேட்டான். சாமியாரோடு இருந்த அழகான பெண்ணைப் பற்றிக் கேட்டான். சாமியார், ஆர்.எஸ்.எஸ்,லே பூந்துட்டார். கார் எல்லாம் குடுத்திருக்காங்க. அந்த சிஷ்யை ரம்பை இப்ப ஒரு துணிக்கடையிலே சேர்ஸ் கேர்ள். காசி சிகரெட்டை வீசி எறிந்தான். புல்லில் லேசாக புகை கசிந்தது. நான் மீண்டும் ஒரு சிகரெட்டுக்குப் பார்த்தேன். இல்லை. எனக்கு பரபரத்தது. நானும் கூட காசியைப் போல் சும்மாத்தான் சிகரெட் குடிக்கிறேன் என்று நினைக்கிறேன். சில சமயங்களில் தோட்டத்துப் பக்கம் கும்மிருட்டில் நின்று குடிப்பேன். குடித்த திருப்தியே இருக்காது. புகையை ஊதி கண்ணால் பார்ப்பதில் தான் திருப்தி போல இருக்கிறது. காலிப் பெட்டியை நசுக்கி தூக்கிப் போட்டான் காசி. ஒண்ணு பத்து என்றேன். போவோமா என்று அரைமனதாகக் கேட்டான் காசி. நடந்து சென்ற போது காசியைக் கேட்டேன்.

டி.ம். எல்லாம் இப்ப ஒண்ணும் பண்றதில்லையா, எதையும் தொடர்ந்து செய்ய முடியலே... காபிக் கரண்டியாலே வாழ்க்கையை அளந்து பார்த்ததா எலியட் சொல்லுவான். எதை அளக்கன்னே எனக்கு முடிவுக்கு வர முடியலே.. காபியா, டீயா என்று கேட்கும் போது வெடுக்கென்று ஒரு விருப்பத்தைச் சொல்ல முடியாதவன் காசி. ஆனால் சாவை எடுத்து அளந்து பார்த்திருக்கிறான். சுவரெட்டிக் குதித்தோம். தூங்கின திருப்தியே இருக்கிறதில்லே. ஓயாம கனவுகள். பகல்லே யோசனை யோசனைகள்.. எனக்குள்ளே நான் ஓயாம நடமாடிட்டு இருக்கிற மாதிரி.. சில சமயம் எனக்குள்ளே இருக்கற நான் தான் நிஜம் - இந்த வெளியிலே நான் சூட்சுமம்னு பயமா தோணுதடா..

பொது நூலகம் தாண்டி சாலையை நெருங்கினோம். குணா, நீ இங்க வந்தா வராமப் போகாதே, வீட்டுக்கு வா. என்னோட கல்யாண மேட்டர்லே இன்னும் நீ கில்டியா ஃபீல் பண்றதா தன்ராஜ் சொன்னான். என்று கைகளைப் பிடித்துக் கொண்டான் காசி.

எனக்குத் தெரிந்த காசி எட்டு வருஷங்களா அப்பயே தான் இருக்கிறான். கர்ப்பம் விட்டு வெளியேறிய பின் அவனுடைய நினைவுப் பாதையில் முதலடி பற்றி ஒரு முறை காசி சொன்னான். அவன் அம்மா இறந்து ஆறாவது மாதமோ, வெய்யிலில் கற்றாழை அடர்ந்து சூழ்ந்த ஒரு வறட்டு இட்டேறி வழியே பாட்டியின் இடுப்பில் கதறிக் கொண்டு வருகிறான் காசி. அவனது பெரியப்பா வீட்டு வாசலில் கொண்டு வந்து இறக்கிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் போகிறாள் ஒரு வெள்ளைச்சீலைக் கிழவி. அது காசியின் அம்மாவைப் பெற்ற அம்மா. மாமன்மாரின் பகல் தூக்கத்தைக் கலைத்து குழந்தை அழுதால் யாரால் தான் சகிக்க முடியும்.

காலேஜ் பருவத்தில் தான் காசி எனக்கு நட்பானான். ஹிப்பாக்ரசி யை அம்பலப்படுத்தி மனிதர்களை, எங்களை பரிகசித்துக்கொண்டு கில்லாடிகளாக உணர்ந்து குதூகலித்துத் திரிந்த எங்கள் நட்பு புத்தகங்கள் மூலம் பலப்பட்டது. வித்தியாசமானவர்களாக மாற்றிமாற்றி மெச்சிக் கொண்டு நடந்தோம். ஆதவனை ரசித்துப் படித்தோம். இடையில் நான் படிப்பதில் ஏனோ தேங்கிப் போனேன். அரசாங்க வேலை கிடைத்து போன பின்தான் காசியின் நெருக்கத்தை இழந்துவிட்டேன். ஆவேசமாகப் பாய்ந்து அரைக் கிணறு தாண்டும் சுபாவம் சிறுவயதிலிருந்தே காசிக்கு இருந்ததாகத் தெரியவில்லை. அவனுடைய பள்ளி வாழ்க்கையைப் பற்றி அதிகம் அவன் சொன்னதில்லை.

அடுத்தவாரம் தொடரும்.. .. ..

# திரும்பிய அம்பு

இயற்கை பச்சைப் பாய் விரித்து அழைக்க காலைக்கதிரவன் விளக்காக இயற்கை மகள் இருகை நீட்டி அழைக்கிறாள். டிங்டாங்... டிங்டாங்... என கடிகாரம் ஏழு முறை அடித்து ஓய துயில் கலைந்தான் ரமேஷ். எழுந்து கண்களைக்கசக்கி அறையைப் பார்த்தான். நந்தினியும், குழந்தைகளும் அங்கு இல்லை. படுக்கையை உதறி வெளியில் பால்கனியை நோக்கினான்.

"அம்மா பால்" என பால்காரன் ஒருபுறம் கூவினான். "கத்தரி... முருங்கை... கீரை... அம்மா" ... என காய்கறி விற்பவள் கூவினாள். கனவில் வந்த இயற்கை காட்சியை மனதில் ஒரு முறை நினைத்து உவகை கொண்டான். குழந்தைகள் ஸ்ருதியும், சுவாதியும் படித்துக் கொண்டிருந்தனர். நந்தினி கொடுத்த காபியை வாங்கிக் கொண்டு செய்தித்தாளைப் புரட்டினான். "சே! வர வர மனிதத் தன்மையே செத்துப் போயிடும் போலிருக்கு" - ரமேஷ் "எதைக் கண்டு இப்படிக் காலைலயே இப்படி அலுத்துக்கிறீங்க".

"இங்க பார் நந்தினி ஒரு யானை பாகனை அந்த யானை துவம்சம் செய்றதை ஒருத்தன் புகைப்படம் எடுத்து பேப்பர்ல போட்டிருக்கிறான். இதை செய்ற நேரம் அவனைக் காப்பாத்தி இருக்கலாம் அல்லவா" "மனுஷத் தன்மைனா என்னப்பா" அப்பாவியாய் கேட்டாள் மூன்றாவது படிக்கும் மூத்தமகள் ஸ்ருதி. "சொல்றேண்டா செல்லம்" என குழந்தையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு. "மனுஷத் தன்மைன்னா யாராவது ஆபத்திலே உதவியில்லாம இருந்தா உதவி செய்யனும். இல்லாதவங்களுக்கு உதவி செய்யனும்.

"சரி... சரி... ரெண்டு பேரும் சீக்கிரம் கிளம்புங்க" என்று குரல் கொடுத்தாள் நந்தினி. அடுத்த அரைமணி நேரம் வரை எல்லோரும் சாவி கொடுத்த இயந்திரமாக சுழலத் தொடங்கினர்.

பல முறை முயன்றும் வண்டி ஸ்டார்ட் ஆக மறுத்தது. சிறிது நேரம் நின்று ஆசுவாசப் படுத்திக் கொண்டு இருந்தான். அப்போது, எதிரில் ஒரு சிறுவன் மெதுவாக வந்து கொண்டிருந்தான். அவன் அழுக்கு படிந்த கந்தல் ஆடையும், கையில் நெளிந்து இருந்த ஈயத்தட்டும் அவன் யாசகன் என்று கூறாதே விளங்கிற்று. காலங்கார்த்தாலேயே



உன் முன்னாடி முழிச்சிட்டு போனா விளங்கின மாதிரி தான்". ச்சீ.. போடா" என்று அவனை தள்ள பக்கத்தில் இருந்த கதவில் பட்டு அவன் கந்தல் சட்டை மேலும் கிழிந்தது. ரமேஷ் அதைக் கண்டும் காணாதது போல் இருந்துவிட்டான்.

"என்ன ரெடியா..." உள்நோக்கி குரல் கொடுத்தான். "இதோ வந்திட்டோம் டாடி! குழந்தைகள் ஓடி வந்தன. ஏற்கனவே இருந்த கோபத்தில் வண்டியை தன் மனைவியாக பாவித்து ஒரு உதைவிட்டான். உடனே ஸ்டார்ட் ஆகியது.

டாட்டா... மம்மி என குழந்தைகள் கை அசைக்க கிளம்பினான். டாடி எல்லோருக்கும் உதவி செய்றது மனித நேயம்னு சொன்னீங்க நீங்க மட்டும் ஏன் அந்த பையனுக்கு சோறு குடுக்கல... அப்ப நீங்க மனுஷன் இல்லையா... " என்றாள் இரண்டாவது மகள். 'ஷட்-அப்" என்று பொரிந்தான்.

ஸ்கூலில் குழந்தைகளை விட்டு விட்டு அலுவலகம் வந்து வேலையில் மூழ்கினான். பின் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் "க்ரீச்" என சத்தம் கேட்டது. அடுத்த நிமிடம் சாலையில் உருண்டான் ரமேஷ். அவன் கண் விழித்தான். இருட்டி இருந்தது. தான் மருத்துவமனையில் இருப்பதை உணர்ந்தான். பக்கத்தில் நந்தினியும், குழந்தைகளும், கூடவே அவன், அவனும்.. "ஆமாங்க காலைல அடிச்சு வெரட்டினீங்களே அந்த பையன் தான்" "சார்... நீங்க அந்த மோட்டார் பைக்கில வந்திட்டு இருந்தீங்களா வழுக்கிடுச்சு" என்றான் அந்த சிறுவன். அவன் வெற்று உடம்பை கைகளால் மறைத்த படி நின்றான்.

"நீங்க விழுந்ததைப் பார்த்துட்டு இவன் ஓடி வந்து பார்த்தப்ப உங்க தலைல இரத்தம் வழிஞ்சுகிட்டு இருந்திருக்கு. அப்புறம் தன் சட்டையை கழற்றி உங்க தலைக்கு கட்டுப் போட்டு உங்கள இங்க சேர்த்துட்டு எனக்கு வந்து சொன்னான். அப்புறம் தான் நான் வந்தேன்." என்றாள் நந்தினி.

சிறுவனின் கிழிசல் சட்டையைப் போலவே தன் மனதும் கிழிந்ததை உணர்ந்தான்.

நன்றி - தமிழ் கூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## உரிமை காப்போம்

நாடு நமதென்பதை அறிவோம்
நாளும் கடமை செய்வோம்
நானிலம் போற்ற வாழ்வோம்
நாகரீகம் காத்து நிற்போம்
நயவஞ்சக தன்மை ஒழிப்போம்
நல்ல உதவிகள் புரிவோம்
நாமெல்லாம் ஒன்று படுவோம்
நமது உரிமை காப்போம்:

சாதி சமய சண்டை வேண்டாம்
சமத்துவம் வளர ஒன்றாக வேண்டும்
நீதி நெறிகள் செழிக் வேண்டும்
நித்திய சண்டை ஓயவேண்டும்
ஆதி மனிதன் வாழ்வு வேண்டும்
அநீதிகள் யாவும் அழிய வேண்டும்
மீதி மனிதன் மிடுக்குடன் வேண்டும்
மேன்மையுள்ள ஒற்றுமை வேண்டும்

உண்மைகள் போற்றப்பட வேண்டும்
உரிமைகள் காக்கப்பட வேண்டும்
பெண்மைகள் உயர வேண்டும்
பேரன்பு பெருக வேண்டும்
வன்மைகள் அடங்க வேண்டும்
வாய்மை விழங்க வேண்டும்
கண்களில் ஒளி வேண்டும்
கடமைகள் ஓங்க வேண்டும்

- [illegible] -

## பிறர்சிரிக்க வாழ்வதால் சிறப்பில்லை!

மனக் கவலைக்கு
மருந்தில்லை
மதுப் பழக்கத்திற்கு
விடிவில்லை!

சிரித்து வாழ்வதால்
நோயில்லை. பிறர்
சிரிக்க வாழ்ந்தால்
சிறப்பில்லை!

கடன்பட்டு வாழ்வதால்
வருந்தொல்லை - வேறு
இடம் விட்டுப் போக
வருமுண்மை!

மானம் இழந்தால்
மதிப்பில்லை - பிறந்த
மதத்தை விட்டு வேறு
மதம் மாறி வாழ்வதும்
அழகில்லை

- சேனையூரான் -



## "மாலையில்"

தோட்டத்தின் இசையில்
வெளிப்படுத்த முடியாத் துயரம்.
தட்டின்மேல் ஐஸ் கட்டியில்
'மட்டிச் சதை' யின் கூர்மையான கடல் மணம்
புதுமையுடன் மணக்கிறது.

நான் உண்மையான நண்பன் என
அவனுக்குச் சொன்னான்:
எனது உடைகளையும் தொட்டான்
அவனது கரங்களில்
எந்த உணர்ச்சியும் இல்லை.

அது பூனையோ ஒரு பறவையோ
தொடுவதனைப் போல...
செம்மையாய் அமைந்த குதிரையின் முதகில்,
சவாரிச்செய்வோனைப் பார்ப்பதனைப் போல..
மெல்லிய பொன்னிற இமையின் கீழே.
அவனது
கண்களில் மட்டும் ஒளி.

பரவும் புகையின் மேல்
வயலினின் துயரஇசை, எழுப்புகிறது:
கடவுளுக்கு நன்றி சொல்:
முதற் தடவையாக
உன்,
கதலுடன் நீ தனியாக

நூல் : மறுபாதி
-அ.யேசுராசா [பனிமழை – ௨00௨]

## மறக்கலாமா?

இருந்தாள் ஒருத்தி எனக்கா - சின்னக்கா
வருந்துகிறேன் இன்று வான் சென்றாள்! -
பொருந்தாத
என்னத்தைச் செய்தாலும் இளமை நின்றாடினளே,
அன்னவளை மறக்கலா மா?

மட்டை இழைப்பும், மற வாத நெற்குற்றும்,
கொட்டுள்ளே தூக்கும் குள மீனும், - வட்டத்துத்
திரிகை அரைப்பும், திருவூஞ்சல் பட்டறையும்
அரிய செயற்குரியாளே ஆம்!

தாடரைவில் - ஈச்சை தருதீவு - நற்கண்டல்
ஆமந்தக்காட்டின் அரியதிடல் - போமளவும்
பிள்ளை இலாப்பாசம் பெரிதாக - பேணியவன்
கொள்கைக்கு விட்டாள் குணம்!

போனார்கள் ஐவர், புகழ்ச்சோமனார் குடியில்!
நானே கடையன் நலமில்லேன் - ஏனாமோ
எண்மத்துமூன்றாச்சு இன்னும் கிடக்கின்றேன்,

– தாமரைத்தீவான்–
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

## மண்ணின் மைந்தர்கள்

திருவள்ளுவர் கழகம் வைத்து
திறனாய்வளாக திகழ்ந்த ஐயா
தெருவீதியின் மாணாக்கர் திறமை
திரண்டெழ செய்த பெரியார்
கன்னியா சரித்திரம் சொன்ன
ஆன்மீக அருள் செல்வர்
சித்த வைத்திய திறனாய்வளராக
விளங்கிய சோமாஸ் கந்தர் ஐயா

- சீ.என்.துரைராசா -



## அசைவின் அர்த்தமென்ன

நான்
தனித்திருக்கும் இரவுகளில்
இமைகளிடையே – நீ

வழிந்தோடும் விழி
நீர் – காதுக் குழி
நிரப்பித்
தலையணை நனைக்கும்

நீயோ
நகராதிருப்பாய்
இமைகளிடையே

அக்
கடைசி நிமிடத்தில்
உன்முகமும்
விழியும் உதடும்
இரு கன்னத்தசைகளும்
பரந்த நெற்றியில் வீழ்ந்த
இரண்டு சுருக்கங்களும்

எண்ணையின்றி வாரப்படா
மயிரும் - கைகளையகற்றிப்
பிசைந்த விரல்களும்

நிலையாய்
நிற்கமுடியாதங்கிங்காய்
நடந்த அவசரமும்

வரண்ட வாயிலிருந்து
வீழ்ந்த ஓரிரு
தொடர்பிலா வார்த்தைகளும்

எதுவுமே
அப்போதெனக்குப்
புரியவில்லை.. .. ..

மூன்றுநாட்களுக்கு முன்
மதியம் மட்டும்
ஒருபுறச் சிரட்டையிற்
கிடைத்த
கஞ்சியினை – நக்கிப்பின்
ஏதுமின்றிக்கிடந்த
என் அறிவை

இன்று – பசி
வென்ற பொழுதில்
நீ வந்தாய்

வரண்ட அவ்வார்த்தைகளை
யுதிர்த்துப் பின்
விழிவழியே யேதோ கூறிப்
போனாய்
நான்
எதையுமே புரியவில்லையே
என் அன்பே

இறுதியாய்
ஒருமுறையேனும்
தழுவத்துடித்த
என் ஆர்வத்தை

வெறிகொண்டு நீ
தவிர்த்தபோதும் ...

இப்போதே கடல்தாண்டி
அப்புறம் போய்ச்சேர்
என்ற பின்னும்

பசிவென்ற அறிவாற்
புரிதலின்றி நான் - உனைப்
பிரிந்தேன்

இப்போ
ஆண்டுகளிரண்டு
கடந்தபின்னும்
நான்
புரிந்துகொள்ளத் துடிக்கும்
உன் அசைவுகளின்
அர்த்தம் தானென்ன?

உங்களுக்காவது தெரியுமா?

அவர்களின்
இறுதியசைவுகளின்
அர்த்தமென்னவென்று?

-- மாயன் --

# தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றும் ஜல்லிக்கட்டு

இயற்கை இன்னல்கள் பலவற்றையும் தாங்கிக் கொண்டு ஆண்டு முழுவதும் வயல்களில் உழைக்கும் உழவனின் பெருமையையும், விவசாயத்தின் மகத்துவத்தையும் உலகிற்கு பறை சாற்றும் மகத்தான திருநாள் தை பொங்கல் தினம் ஒன்றுதான் என்றால் அது மிகையாகாது.

ஒவ்வொரு விவசாயக் குடிமகனும் தங்கள் நிலங்களில் விளைந்த நெல், மஞ்சள், கரும்பு போன்றவற்றுடன் சர்க்கரை பொங்கல் படையல் வைத்து, மாவிலை தோரணம் கட்டி இயற்கையையும், சூரியனையும் வழிபடும் தமிழர் திருநாள் தை பொங்கல். தை பொங்கல் விழா தமிழர்களின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் அதே வேளையில், தமிழரின் வீரத்தை உலகிற்கே வெளிச்சம் போட்டுக் காட்டும் முரட்டுக் காளையை அடக்கும் ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு போன்ற வீர விளையாட்டுகள் தை மாதம் முழுவதும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும். ஆனால் சிந்து சமவெளி நாகரீகத்திலேயே ஜல்லிக்கட்டு புழக்கத்தில் இருந்துள்ளது. 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கல்முத்திரையில் இதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது.

காளைகளை அடக்கும் திருவிழா ஸ்பெயின், போர்ச்சுக்கல் போன்ற அயல்நாடுகளிலும் நடைபெற்று வருகிறது. அது கூர்மையான வாளைக் கொண்டு காளையை காயப்படுத்தி அடக்கும் விளையாட்டுகளாகும். ஆனால் தமிழகத்தில் கொம்புகள் கூர்சீவி விடப்பட்ட முரட்டுக் காளைகளை அடக்கும் ஜல்லிக்கட்டு தனித்தன்மை வாய்ந்தது மட்டுமல்ல, தமிழரின் வீரத்திற்கும், வீரத்துடன் ஒன்றிணைந்த பண்பாட்டிற்கும் சான்றாகத் திகழ்கிறது.

4 ஆயிரம் ஆண்டுகள் பழமையான சிந்து சமவெளி நாகரீக காலத்திலேயே ஜல்லிக்கட்டு புழக்கத்தில் இருந்துள்ளது. சிந்து சமவெளி நாகரீக காலத்தில் புழக்கத்தில் இருந்த பொருட்கள், தற்போதைய பாகிஸ்தானில் உள்ள



மொகஞ்சதாரோவில் கடந்த 1930-களில் கண்டெடுக்கப்பட்டன. அப்பொருட்கள் டெல்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன. அந்த பொருட்களில் கல்லால் ஆன ஒரு முத்திரையும் அடங்கும். அந்த முத்திரையில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை சித்தரிக்கும் ஒரு சிற்பம் செதுக்கப்பட்டு உள்ளது. ஒரு காளை மாடு தன்னை அடக்க முயலும் வாலிபர்களை முட்டி தூக்கி வீசுவது போலவும், வாலிபர்கள் அந்தரத்தில் பறப்பது போலவும் அந்த முத்திரை செதுக்கப்பட்டு உள்ளது. இந்த முத்திரை 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கி.மு. 2000ஆம் ஆண்டைச் சேர்ந்ததாக கருதப்படுகிறது. இதன் மூலம் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஜல்லிக்கட்டு புழக்கத்தில் இருந்ததாக தெரியவந்துள்ளது. இதை பல்வேறு ஆராய்ச்சியாளர்களும் உறுதிப்படுத்தி உள்ளனர். ஆனால் இந்த முத்திரையில் எழுத்துகள் எதுவும் இடம்பெறவில்லை. இந்த முத்திரை அஸ்கோ பர்போலா என்பவர் எழுதிய ஒரு புத்தகத்தில் வண்ண புகைப்படமாக இடம் பெற்றுள்ளது.

அதை கடந்த 1977ஆம் ஆண்டு இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியிட்டது. இந்த முத்திரை கி.மு. 2000-ம் ஆண்டை சேர்ந்தது. இதை பாதுகாப்பாக வைத்துள்ளனர். சிந்து சமவெளி நாகரீக காலத்தில் நடைமுறையில் இருந்த ஜல்லிக்கட்டை இந்த முத்திரை பிரதிபலிப்பதாக பல ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். இதில் உள்ள படத்தை வைத்து இருவிதமான கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. ஒருசாரார் ஒரு காளை ஒன்றுக்கு மேற்பட்ட ஜல்லிக்கட்டு வீரர்களை தூக்கி வீசுவதாக கூறுகிறார்கள். 2 வீரர்கள் அந்தரத்தில் பறப்பது போலவும், ஒரு வீரர் காளையை பிடிக்க முயல்வது போலவும், மற்றொருவர் பல்டி அடிப்பது போலவும், 5-வது நபர் தரையில் விழுந்து கிடப்பது போலவும் இந்த சித்திரம் அமைந்திருப்பதாக கூறுகிறார்கள்.

தமிழர் இலக்கியத்தில் "கொல்லேறு தழுவல்" என்று பெயர் கூறி காளை அடக்குவது செவ்வனவாக சித்தரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆளை கொன்று தூக்கி எறியும் வகையில் வளர்க்கப்பட்ட காளையை, வீரம் சொரிந்த காளையர்கள் அடக்குவதை தழுவல் என்று வீரத்தையே மென்மையான வார்த்தையைக் கொண்டு தமிழ் இலக்கியம் சித்தரிக்கிறது.

ஜல்லிக்கட்டில் இறக்கப்படும் காளைகளை அதற்கென்றே வளர்க்கின்றனர். ஜல்லிக்கட்டு காளையை அடக்கும் காளையர்க்களுக்கும், அவர்களை தூக்கியெறிய முற்படும் காளைக்கும் இடையிலான சம வாய்ப்புடைய வீர சோதனைதான்.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டில் ஒரு முறை இறங்கிய காளையர் எவரும் அடுத்த ஆண்டும் இறங்கி தங்கள் திறனை தொடர்ந்து நிரூபிக்காமல் இருப்பதில்லை.

ஜல்லிக்கட்டு நடக்கும் பல ஊர்களில் ஒரு காலத்தில் தீவிரமாக காளை அடக்குவதில் போட்டி போட்டவர்கள், இன்று வயது முதிர்ந்த நிலையிலும் கூட, ஜல்லிக்கட்டு நடக்கும் நாளில் பட்டிக்குச் சென்று, சீறிக் கொண்டு பாய்ந்துவரும் காளை ஒன்றை தொட்டுவிட்டு வீடு திரும்பும் வழக்கம் இன்றும் உள்ளது.

-- தமிழ் கூடல்--

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாங் லீவில் செல்லும் 'தல'



கவுதம் மேனனின் இயக்கத்தில் தற்போது நடித்துக்கொண்டிருக்கும் படத்தை முடித்துவிட்டு ஒரு லாங் விடுமுறையை அறிவிக்க இருக்கின்றாராம் அஜீத். 'ாலினிக்கு இரண்டாவது குழந்தை பிறக்கும் வரை அருகில் இருந்து கவனித்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் முடிவெடுத்துள்ளாராம். அதுமட்டுமில்லாமல் நீண்ட நாட்களாக தள்ளிப்போய்க்கொண்டிருக்கும் முதுகு ஆபரேஷனையும் இந்த விடுமுறையில் முடித்துவிட அவர் முடிவு செய்துள்ளாதாகவும் கூறப்படுகிறது,.

# கொழு கொழு கன்ன வாய்ப்பு



விமல்,பிரியா ஆனந்த், சூரி நடிக்கும் ஒரு ஊர்ல ரெண்டு ராஜா திரைப்படத்துக்கு டி.இமான் இசையமைக்கிறார். இந்த படத்தின் பாடல் இறுவட்டு வெளியிட்டு விழா சென்னையில் கோலாகலமாக இடம்பெற்றிருந்தது. விழா மேடையிலேயே டி.இமானின் கன்னத்தை பிடித்து சுச்சும்மா, பிச்சுக்குட்டி, செல்லக்குட்டி என்று கிள்ளி தனது ஆசையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அழகான பொண்ணு கன்னத்தை கிள்ளும்போது யாருக்கு தான் சந்தோசம் இல்லை...

# ஸ்ரேயா திடீர் திருமணம்



ரஜினியுடன் சிவாஜி, படம் உள்பட பல திரைப்படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக விளங்கிய நடிகை ஸ்ரேயா சமீபத்தில் நடித்து வெளியான மனம் திரைப்படம் நல்ல வசூலை கொடுத்ததோடு அப்படத்திற்கு பின்னர் வேறு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. எனவே அவருக்கு திருமணம் செய்துவைக்க அவரது பெற்றோர்கள் முடிவு செய்துள்ளனர். துபாயை சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு திருமணம் செய்துவைக்க அவரது பெற்றோர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

# ஜோதிடமும் - ஹன்சிகாவும்



தமிழ், தெலுங்கு பட உலகில் ஹன்சிகா முன்னணி நடிகையாக இருக்கிறார். பெரிய ஹீரோக்களுடன் ஜோடியாக நடிக்கிறார். இது குறித்து ஹன்சிகா கூறுவதாவது இவ்வளவு பெரிய நிலைமைக்கு வருவேன் என்று எனக்கு முன்பே தெரியும், சிறு வயதில் நான் ஜோதிடம் பார்த்தேன். எதிர்காலம் பிரகாசமாக இருக்கிறது என்றும் மக்கள் மத்தியில் பிரபலமாக இருப்பேன் என்றும் ஜோதிடர் கூறினார். அது பலித்து விட்டது. இப்போது பிரபல நடிகையாகி விட்டேன் என்கிறார்.

# அஞ்சான் தோல்வியால் 'மாஸ்' கேள்விக்குறியில்



சூர்யா,சமந்தா நடிப்பில் கடந்த சுதந்திர தினத்தில் வெளியான அஞ்சான் திரைப்படம் எதிர்பாராத நிலையில் அதிர்ச்சி தோல்வி அடைந்ததால் தற்போது சூர்யாவை வைத்து மாஸ் படத்தை இயக்கி வரும் வெங்கட்பிரபு அதிர்ச்சி அடைந்துள்ளதாக கோலிவுட்டில் செய்திகள் பரவியுள்ளன. தற்போது அஞ்சான் படுதோல்வி அடைந்துள்ளதால் சூர்யாவை ரசிகர்கள் கலாய்ப்பதை பார்த்தால் வெங்கட்பிரபு படத்தை ரத்து செய்துவிடுவார் என்று கோலிவுட்டில் கிசுகிசுக்கள் கிளம்ப ஆரம்பித்துவிட்டது.

# அடுத்த கார்த்திக் உருவாகிறாரா??



தமிழில் "கடல்" அறிமுகமானவர் ஐஸ்வர்யா வை', 'சிப்பாய்' வருகிறார். முருகதாஸ் கௌதம் ள்ளார். இப்படத் படத்தின் மூலம் கதாநாயகனாக கௌதம் கார்த்திக். தற்போது, தனுஷ் இயக்கத்தில் 'வை ராஜா உள்ளிட்ட படங்களில் நடித்து இந்நிலையில், ஏ.ஆர். தயாரிக்கும் புதிய படத்திலும் கார்த்திக் நடிக்க ஒப்பந்தமாகியு திற்கு 'ரங்கூன்' என பெயர் வைத்திருக்கின்றனர். இப்படம் 25 வயது இளைஞர் ஒருவரின் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு உருவாகிறதாம்.

# லிங்கு கைதாகுவாரா!!

தமிழில் லிங்குசாமி இயக்கத்தில் வெளியான அஞ்சான் திரைப்படத்திற்கு யூ சான்றிதழ் வழங்க லேப்டாப் மற்றும் ஐபேடு ஆகியவற்றை லஞ்சமாக வழங்கியது தெரியவந்துள்ளது. அஞ்சான் படத்தில் அதிக வன்முறை இருப்பதாகவும், லஞ்சம் கொடுத்தால் மட்டுமே படத்திற்கு யூ சர்டிபிகேட் வழங்க முடியும் என வலியுறுத்தி அஞ்சான் தயாரிப்பாளர் லிங்குசாமி யிடம் ராகேஷ் குமார் லஞ்சமாக பொருட்களை பெற்றுள்ளார். நீதிமன்றத் தில் லஞ்சம் கொடுத்தவர்களையும் கைது செய்ய அனுமதித்தால் லிங்குசாமி கைது செய்யப்படுவார் என்றும் சிபிஐ வட்டாரம் தெரிவித்துள்ளது.



# சினிமுரசு

## திரை விமர்சனம் பார்த்தீபனின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்



நீண்ட இடைவேளைக்கு பின்னர் பார்த்திபன் இயக்கியிருக்கும் படம்.

சினிமாவில் எப்படியாவது இயக்குனராக வேண்டும் என்ற கனவோடு கோடம்பாக்கத்தை வலம் வந்துகொண்டிருக்கும் நாயகன் சந்தோஷ், தனது காதலி அகிலாவிடம் இயக்குனர் ஆகி முதல் படம் ரிலீஸ் ஆனபின்னர் தான் திருமணம் என்று கூறுகிறார். ஆனால் காதலில் அகிலா கட்டாயத்தின்பேரில் வேறு வழியின்றி திருமணம் செய்து கொள்கிறார். வேலைக்கு செல்லும் அகிலா, வீட்டிலேயே கதை விவாதம் வைத்துக்கொள்ளும்படி ஆலோசனை கூற தனது நண்பர்கள் தினேஷ், விஜய் ராம், லல்லு மற்றும் தம்பி ராமையாவுடன் வீட்டிலேயே கதை விவாதம் நடைபெறுகிறது. இந்நிலையில் அகிலாவுக்கும் சந்தோஷுக்கும் கருத்து வேறுபாடு வருகிறது. எனவே இயக்குனர் ஆகும் வரை இருவரும் பிரிந்திருப்பது என்று முடிவு செய்கின்றார்கள். இந்நிலையில் ஒரு கதையை தயார் செய்து தயாரிப்பாளரின் சம்மதத்திற்காக காத்திருக்கின்றார். தயாரிப்பாளர் சம்மதித்தாரா? சந்தோஷ் இயக்குனர் ஆனாரா? சந்தோஷ் - அகிலா மீண்டும் ஒன்று சேர்ந்தார்களா? என்பதை பார்த்திபன் தனது பாணியில் கூறியிருக்கிறார்.

ஒரு மாஸ் நடிகரின் படம் வெளியாகும்போது தனது லோ பட்ஜெட் படத்தை ரிலீஸ் செய்த பார்த்திபனின் துணிச்சலுக்கு ஒரு பாராட்டு. கதையே இல்லாமல் விறுவிறுப்பாக படத்தை நகர்த்தி செல்லும் திரைக்கதை வசனம்தான் படத்தின் ப்ளஸ். ஆங்காங்கே பார்த்திபன் ஸ்டைல் நையாண்டி வசனங்கள். படத்தின் நாயகன் தம்பி ராமைய்யா என்றுதான் சொல்ல வேண்டும். படத்தை சிறிதுகூட சோர்வின்றி நகர்த்தி செல்ல இவருடைய அனுபவம் நன்கு உதவி செய்துள்ளது.

சந்தோஷ், அகிலா இருவரையும் அளவோடு வேலை வாங்கியிருக்கிறார். மேலும் கௌரவ வேடங்களில் ஆர்யா, அமலாபால், விஷால், விஜய் சேதுபதி, சேரன், டாப்சி ஆகியோர்களையும் சரியாக பயன்படுத்தியுள்ளார். ஆர்யா-அமலாபால் காட்சிகள் மிக அருமை.



ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு இசையமைப்பாளரை பயன்படுத்தியுள்ளார் பார்த்திபன். வித்தியாசமான கோணத்தில் கதையே இல்லாத ஒரு கதையை தேர்வு செய்து வெற்றி பெற்றுள்ளார் பார்த்திபன். மொத்தத்தில் கதை திரைக்கதை வசனம் இயக்கம் குடும்பத்துடன் தைரியமாக பார்க்கலாம்.

# சினிமா குறுஞ் செய்திகள்



சமந்தா பெரிய நடிகர்களுடன், அதாவது அஜித்,விஜய், சூர்யா போன்ற தல தளபதிகளுடன் ஆடைகளைக் குறைத்து அப்படி இப்படியெல்லாம் நடிக்க தயார் என்றுத் அதிரடியாக அறிவித் துள்ளாராம்.

பிரபல தெலுங்கு தயாரிப்பாளர் பெல்லம் கொண்டா சுரேஷ், தனது மகன் பெல்லம் கொண்டா சீனிவாசை நாயகனாக வைத்து படங்கள் எடுத்து வருகிறார். இப்படத்திற்கு தமன்னாவை ஒப்பந்தம் செய்துள்ளனர். தமன்னாவுக்கு சம்பளத்துக்கு பதில் வீடு கொடுக்க பேச்சு வார்த்தை நடக்கிறது.

சுற்றிலும் கார்கள் விர்ரென்று பறந்து ஓடும் இருங்காட்டுக் கோட்டையில் நடிகர் ஜெய்யைப் பார்ப்பவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. பயந்த சுபாவத்தில் நடித்து வந்த ஜெய் பந்தைய காரிலிருந்து இறங்கி வந்ததை இட்டு ரசிகர்களுக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை.

கௌதம் கார்த்திக் கதாநாயகனாகவும் ஜோடியாக பிரியா ஆனந்தும் நடித்து படப்பிடிப்புகள் முடிந்து ரிலீசுக்கு தயாராகவுள்ள நிலையில், இப்படத்தை பிரத்யேகமாக பார்த்த சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மிகவும் ரசித்து பார்த்ததாகவும் படம் வெற்றியடைய வாழ்த்துக்கள் கூறியதாகவும் தெரியவந்துள்ளது.

ஜவுளிக்கடை ஷோரூமை திறந்து வைக்க சென்ற ப்ரணீதாவை பார்க்க பெருந்திரளாக திரண்டு அவரை சூழ்ந்து கொண்டனர். ஒருசிலர் அவரிடம் ஆட்டோகிராப் கேட்டு நச்சரித்தனர். மேலும் ஒருசிலர் கூட்டத்தை பயன்படுத்தி அவரது இடுப்பு கை மற்றும் ஒருசில பகுதிகளில் சில்மிஷம் செய்ய ஆரம்பித்ததை அடுத்து அவர் விரைவாக அங்கிருந்து சென்றுவிட்டாராம்.

ரஜினியுடன் "லிங்கா", அஜித்துடன், தெலுங்கில் "பாகுபலி, ருத்ரமா தேவி" ஆகிய படங்களில் நாயகியாக நடிக்கிறார். இரவு, பகலாக தொடர்ந்து இந்தப் படங்களில் நடித்தததால் சிறிதுகூட ஓய்வு இல்லாமல் இருந்தாராம். தற்போது ஒரு பத்து நாள் எந்தப் படப்பிடிப்பும் இல்லாமல் சிறிய இடைவெளி கிடைத்ததாம். அதனால், தனிமையான ஒரு இடத்திற்குப் பறந்துவிட்டாராம்.

ஆஸ்கர் ரவிசந்திரன் தயாரிப்பில் ஷங்கர் இயக்கத்தில் ஐ திரைப்படத்தில் இசை வரவிருக்கிறது. இதில் உலக சூப்பர் ஸ்டார்களான அர்னால்ட், ஜாக்கிஜான் மற்றும் சூப்பர் ஸ்டார், உலக நாயகனுக்கும் இந்த பிரம்மாண்ட இசை வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய சினிமாவில் தனக்கென ஒரு தனித்துவம் கொண்டவர் அமீர்கான். இவர் சமீபத்தில் வெளியிட்ட செய்தி சத்யமேவ ஜெயதேவுக்குப் பிறகு யாரும் என்னை நடிகனாகவே பார்ப்பதில்லை. ஆகவே நான் ஓய்வு பெறும் நேரம் வந்துவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

சன்னி லியோன் மார்க்கெட் அதிகரித்து கொண்டே போகிறது. ஆனால் இவருடன் அந்த காட்சிகளில் நடிக்கவேண்டும் என்றால் கண்டிப்பாக அந்த கதாநாயகர்கள் HIV டெஸ்ட் எடுத்திருக்க வேண்டுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ட்ரொப் பொக்ஸ்




ஒன்லைன் ஸ்டோரேஜ் வசதியை தரும் Dropbox ஆனது தற்போது Dropbox Pro எனும் புதிய திட்டத்தினை அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்தின்படி 9.99 டொலர் மாதாந்தக் கட்டணத்திற்கு 1TB சேமிப்பு வசதியினை பயனர்களுக்கு வழங்கவுள்ளது. இதற்கு முன்னர் 9.99 டொலர்களுக்கு 100GB சேமிப்பு வசதியும், 19.99 டொலர்களுக்கு 200GB சேமிப்பு வசதியும், 49.99 டொலர்களுக்கு 500GB சேமிப்பு வசதியினையும் Dropbox வழங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## அறிமுகமாகும் புதிய வசதி



ஸ்மார்ட் கைப்பேசிகளைப் பயன்டுத்தி பாடல்களை மிக்ஸிங் செய்து கேட்டு மகிழக்கூடிய புதிய சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Openmix எனப்படும் இச்சாதனத்தை Gabriel Danet என்பவர் வடிவமைத்துள்ளார். மிகவும் சிறிய அளவிலான Openmix சாதனத்தை சட்டைப் பைகளில் இட்டும் எடுத்துச் செல்லக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

## விளையாட்டுப் பையன்

## iphone 6

அப்பிள் நிறுவனமானது விரைவில் தனது iPhone 6 இனை அறிமுகம் செய்யவுள்ள நிலையில் iPad Air 2 மற்றும் iPad Mini 3 எனும் இரு டேப்லட்களை இவ்வருட இறுதியில் அறிமுகம் செய்யவுள்ளது. இவற்றில் iPad Air 2 தொடர்பான புகைப்படங்களும், புதிய தகவல்களும் வெளியாகியுள்ளன. இதன்படி அப்பிளின் இரண்டாம் தலைமுறைக்குரிய A8 64-bit Mobile Processor இனை கொண்டுள்ள இச்சாதனத்தில் 2GB RAM, 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, வீடியோ அழைப்புக்களுக்கான FaceTimeHD கமெரா என்பனவும் காணப்படுகின்றன.

## இலவசமாக மென்பொருளை அப்டேட் செய்ய

விண்டோஸ் இயங்குதளத்தில் செயற்படும் கணனிகளில் ட்ரைவர் மென்பொருளை அப்டேட் செய்து கணனியின் வேகத்தினை கூட்டுவதற்கு Driver Booster எனும் மென்பொருள் பயனுள்ளதாக காணப்படுகின்றது. முற்றிலும் இலவசமாகக் கிடைக்கும் இம்மென்பொருளானது கணனியின் வன்பொருட்களை தானாகவே ஆய்வு செய்து அவற்றிற்கு ஏற்றவாறு அவசியமான ட்ரைவர் மென்பொருட்களின் பிந்திய பதிப்புக்களை பாதுகாப்பாக இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்து நிறுவுகின்றது.

## குரல் தேடல்



தற்போது அன்ரோயிட் சாதனங்களுக்காக அறிமுகம் செய்யப்பட்ட கூகுள் தேடலின் புதிய பதிப்பில் மேலும் பல மொழிகளை அடிப்படையாகக் கொண்ட குரல் வழித்தேடலை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இதன்படி 50 இற்கு மேற்பட்ட மொழிகளில் தேடுதலை மேற்கொள்ள முடியும். மேலும் இம்மென்பொருளின் புதிய பதிப்பினை Google Play Store தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

## SONY XPERIA Z3

சோனி நிறுவனம் விரைவில் அறிமுகம் செய்யவுள்ள புதிய Sony Xperia Z3 டேப்லட்டின் புகைப்படங்கள் உட்பட அவற்றின் சிறப்பம்சங்கள் தொடர்பான தகவல்கள் வெளியிட்டுள்ளன. இதன்படி இது Snapdragon 801 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது. மேலும் 8 அங்குல அளவுடையதும், 1920 x 1080 Pixel Resolution உடையதுமான HD IPS தொழில்நுட்பதில் அமைந்த தொடுதிரையினையும் உள்ளடக்கியுள்ளது.

## ஐபோன் கார்



பிரபல கார் வடிவமைப்பு நிறுவனங்களுள் ஒன்றான Tesla தற்போது பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை புகுத்தி கார்களை வடிவமைத்து வருகின்றது. இவற்றுள் iPhone உதவியுடன காரை இயக்கக்கூடிய தொழில்நுட்பத்தினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. இதற்காக Tesla Mobile App எனும் விசேட அப்பிளிக்கேஷனை உருவாக்கவுள்ளதோடு பின்னர் அன்ரோயிட் கைப்பேசிகள் மூலமாகவும் இக்காரை இயக்கக்கூடிய வசதியினை அறிமுகப்படுத்தவுள்ளது.

## ஓட்டவீரர்க்கான பார்வை

போட்டிகளில் கலந்துகொள்ளும் ஓட்ட வீரர்கள் தம்மை அதற்காக தயார்ப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உதவி புரியக்கூடிய அதிநவீன சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. runScribe எனப்படும் இச்சாதனம் முப்பரிமாண பார்வையை வழங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. காலணிகளில் பொருத்தி பயன்படுத்தக்கூடிய இக்கருவியில் 9 வகை சென்சார்கள் காணப்படுகின்றன.



## வைரஸை க்ளீன் செய்ய



USB பென் டிரைவ்களை வெவ்வேறான கணனிகளில் உபயோகிப்பதால் வைரஸ்கள் சுலபமாக பென்டிரைவில் புகுந்து உள்ளே இருக்கும் பைல்களை பாதிக்கிறது. இப்படி பாதிக்கும் பொழுது பென்ட்ரைவில் உள்ள பைல்கள் மறைக்கப்பட்டுவிடும் கணனியில் பென்டிரைவை ஓப்பன் செய்தால் எந்த பைல்களும் இருக்காது. காரணம் நம் தகவல்களை வைரஸ்கள் மறைத்து வைத்துவிட்டது. எப்படி அந்த பைல்களை பத்திரமாக மீண்டும் கொண்டு வருவது என பார்ப்போம். கீழே உள்ள வழிமுறையின் படி கவனமாக செய்து அந்த பைல்களை மீட்டு எடுங்கள்.

- முதலில் பென்டிரைவை உங்கள் கணனியில் சொருகி கொள்ளுங்கள்.
- Start==, Run==, CMD==, Enter கொடுக்கவும்.
- இப்பொழுது பென்ட்ரைவ் எந்த ட்ரைவில் உள்ளது என பாருங்கள். My Computer செல்வதன் மூலம் கண்டறியலாம்.

உதாரணமாக E: டிரைவில் பென்ட்ரைவ் இருக்கிறது என வைததால் அதற்கு E: என கொடுத்து Enter அழுத்தவும்.

- attrib -h -s -r /s /d *.*என டைப் செய்யுங்கள் ஒவ்வொரு பகுதிக்கும் Space சரியாக கொடுக்கவும்.

நீங்கள் சரியாக கொடுத்து உள்ளீர்கள் என உறுதி செய்து கொண்டு Enter அழுத்துங்கள்.

சில வினாடிகள் பொறுத்திருங்கள். இப்பொழுது உங்கள் பென்ட்ரைவ் சோதித்து பாருங்கள் உங்களுடைய பைல்கள் அனைத்தும் திரும்பவும் வந்திருக்கும்.

## ஒரு கொலையின் கதை

3-5 மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

கடந்த வாரத் தொடர்ச்சி .........

அந்தக் காவல்துறை அலுவலக அறையின் கதிரைகள் யாவும் சுமைதாங்க முடியாமல் சத்தமெழுப்பிக்கொண்டு இருந்தன... உதவிக் காவல்துறை அத்தியட்சகரின் முன்நிலையில் விசாரணைகள் முடிவடைந்த விடயங்களை உள்ளடக்கிய கோப்பு மின் விசிரியின் சுழற்சிக்கு தன்னுள்ளே அடங்கியிருந்த காகிதங்களின் ஆட்டத்திற்கு ஈடுகொடுத்துக் கொண்டிருந்தது...... அவர்கள் கட்டளைக்காகக் காத்திருந்தனர்........

............................................................ இனி இந்த வாரம்..

அந்து அலுவலக அறைக்கு உதவிக் காவல்துறை அத்தியட்சகரின் வரவு ஒரு உயிர்ப்பினைக் கொடுத்தது.... ஏற்கனவே குற்றுயிராய்க் கிடந்த கதிரைகள் பின்புறமாகத் தள்ளப்படும் ஒலி அந்த அறையில் நாராசமாய் ஒலித்தோய்ந்தது "குட்மோர்னிங் சேர்" எனற் வந்தனத்தைத் தொடர்ந்து கால்களை நேராக்கி அவர்கள் காவல்துறை வந்தனத்தைத் தெரிவித்தனர். அவர் கையினை சிறிது மேலுயர்த்தி அவ்வந்தனத்தைப் பெற்றுக்கொண்டு "குட்மோர்னிங்...சிட்டவுன் பிளீஸ்...." எனத் திருவாய் மலர்ந்தார்...

மீண்டும் கதிரைகள் இழுபடும் ஒலி முன்னரை விட நாராசமாய் இருந்தது....

" சரி...... இப்போது இக் கொலை வழக்கின் மற்றுமொரு அந்தத்திற்கு வந்திருக்கின்றோம் என நினைக்கின்றேன்....." அனைவரதும் மௌனம் அதனை ஆமோதித்தது....

" இக் கொலைவழக்கின் மூன்றாவது சந்தேக நபராக கொலையுண்டவரின் மனைவி மீது சந்தேகங் கொள்ளத்தக்கதான ஆதாரங்கள் எமக்குக் கிடைத்துள்ளன... ஆனால் அவர் இலங்கைக்கு வெளியே உள்ளார்.... இங்கிலாந்து நாட்டில் அகதித் தஞ்சம் கோரி அதன்படி அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அவர் மீதான விடயங்களையிட்டு நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.... இந்தக் கொலையின் ஒவ்வொரு படிநிலையிலும் எவ்வளவு அவதானத்தையும் பொறுப்பையும் கொண்டிருந்தோமே அதே அவதானம் எமக்குத் மூன்றாவது சந்தேக நபர் தொடர்பாகவும் தேவையாக இருக்கின்றது."

அவர் ஓரிரு நிமிடங்கள் தாமதித்தார்... "மூன்றாவது சந்தேக நபர் இவ்வழக்கில் தொடர்புபட்டுள்ள இடங்களையும் அவரைச் சந்தேகிக்கக்கூடிய தடயங்களையும் தொகுத்துச் சொல்லும் தொகுப்பு அறிக்கை உங்கள் முன்னுள்ள கோவையில் இருக்கின்றது... அதனை வாசித்து அதன் சரி பிழைகளைப் பற்றி ஆராயலாமா?...... " என்ற அவரின் கேள்விக்குப் பதில் மொழியாக எவையும் வரவில்லை... ஆனால் அவர்கள் அனைவரும் தமக்கு முன்னுள்ள கோவையின் முதற்தாளின் மீது கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டனர்.

அந்தத் தொகுப்பு அறிக்கையின் முதலாவது பதிவாக ஹிம்சாவின் இறுதித் தங்கையின் முதலாவது சாட்சிய அறிக்கையின் முக்கிய பாகங்கள் தொகுக்கப்பட்டிருந்தன.....

" நான் , கொலையுண்டவர் மற்றுமொரு உறவினப் பெண்ணுமாக மூவரும் கடற்கரைக்குச் சென்றபோது தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகாமையில் யாரோ தன்னைக் கண்டு ஒளிந்ததாக கேதீஸ் தெரிவித்தார்..... அவர்கள் கள்வராக இருக்கலாம் என்பதால் வீட்டை உசார்ப்படுத்துமாறு தெரிவித்தார்.... நான் கடற்கரைக்குச் சென்ற பின் அதனைத் தெரிவித்தேன்...

" நான் கடற்கரைக்குச் சென்று 15 நிமிடங்கள் ஆகும்போது இலண்டனில் இருந்து அக்கா தொலைபேசி அழைப்பை எடுத்தார். அதிர்வில் எனது கைப்பேசி இருந்ததால் நான் அழைப்புக்கு பதிலளிக்கபெடுக்கவில்லை... அடுத்த கணம் கொலையுண்டவருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு என்னுடன் கதைத்தார். யாருடன் கடற்கரைக்கு வந்திருக்கின்றேன் என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட அவர் மீண்டும் கொலையுண்டவரிடம் கதைக்கப்போவதாகக் கூறி யாருடன் கடற்கரைக்கு வந்தோம் என்பதனை உறுதிப்படுத்தியிருந்தார்."

" வீட்டிற்குச் சென்று உடனடியாக தனக்கு அழைப்பை ஏற்படுத்துமாறு அக்கா அவருக்குக் கூறினார்... அதன் படி நாங்கள் சென்றோம்... கொலையுண்டவர் தொலைபேசியில் அக்காவுடன் கதைத்தார்... பின்னர் ஸ்கைப்பிலும் அவருடன் கதைத்தார்.."

"அதன் பின்னரே கொலையுண்டவர் புறப்பட்டுச் சென்றார்.... இலண்டனில் அக்கா பாவித்த தொலைபேசி இலக்கம் இதுதான் என நான் உறுதிப்படுத்துகின்றேன்...."

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு தொகுப்புக் குறிப்பிலும் பருமட்டான நேரங்கள் குறிக்கப்பட்டிருந்தன.... நேரம் முன்னிரவு 8.45ல் இருந்து 9.25 வரையாக இருந்தது.

அடுத்த தொகுப்புக் குறிப்பு அலிகவினது கைத்தொலைபேசிக்கு மேற் குறித்த நேரத்தில் உள்வந்த அழைப்புக்களைப் பட்டியலிட்டிருந்தது..... அந்தப்பட்டியலில் இலண்டனில் இருந்து உடுக்கப்பட்ட அழைப்புக்கள் மற்றொறு நிறத்தால் தீட்டப்பட்டிருந்தன....

இலண்டன் அழைப்பு மாறி மாறிப் பயணித்திருந்தது.....

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் -16 சிந்தித்தலும் நிந்தித்தலும்

(வி.எஸ்.சந்திரகாந்தி)



ஒரு கணம் விழிகளை இறுக மூடிக்கொண்டு சிந்திக்காமல் இருக்க முயற்சி செய்து பாருங்கள். முடியவே முடியாதல்லவா? அது தான் உண்மை.

இறைவனால் மனிதனுக்கு போடப்பட்ட பொறி (TRAP) அதுவேயாகும். இறந்த காலத்தை பற்றி எண்ணி கவலைப்பட்டுக்கொண்டும், எதிர்காலத்தை எண்ணி பயந்து கொண்டும் நிகழ்கால பிரச்சனைகளை எண்ணி ஏங்கியபடியும் வாழ்வது தான் மனித வாழ்க்கை என்றாகி விட்டது. அரிஸ்டாட்டில், கார்ள்மாக்ஸ், சோக்கிரட்ஸ் போன்ற பல சிந்தனைவாதிகள் தமது சிந்தனா சக்தியால் இந்த உலகிற்கே புதுத் தென்பூட்டியிருக்கிறார்கள். இன்றும் மனித சமுதாயம் அவர்களை மறக்காமல் போற்றுகின்றது.

திருவள்ளுவரால் அருளப்பட்ட திருக்குறளை முற்றாக ஆராயின் மனித சிந்தனை எவ்வாறான சக்தியை கொண்டது. அதன் விஸ்தீரணம், ஆழம், கூர்மை என்பன எவ்வாறானவை என்பவற்றை கண்டு கொள்ள முடியும். மனிதனின் சிந்தனா சக்தியை தூண்டிவிடும்படியான இந்து மத சாஸ்திரங்கள் எண்ணிலடங்கா. அவை யாவற்றுக்கும் மேலாக வேதங்கள், உபநிடதங்கள் விஞ்ஞானிகளால் கற்பனை செய்து பார்க்கவும் முடியாத பிரபஞ்சத்தின் கர்த்தா, தோற்றம், நோக்கம் பற்றியெல்லாம் ஆதாரபூர்வமாக ஆராய்கின்றன. எமது முன்னோர் தமது சிந்தனையால் பற்பல சாதனைகள் படைக்கையில் எம்மால் மட்டும் எமது சிந்தனையை உயர்த்திக்கொள்ள முடியாமைக்கு காரணமென்ன? அந் நாட்களில் கணனியோ 'ஐபோன்' வசதியோ இருந்ததில்லை. தட்டச்சு செய்து கொள்ளும் வசதியும் இல்லை. ஆனால் அவர்களிடம் சிறந்த நினைவாற்றல் இருந்தது. குரு சிஷ்ய பரம்பரை வாயிலாக மதிப்புமிக்க சிந்தனைகள் பேணப்பட்டு வளர்ச்சியும் கண்டன. பற்பல ஆசான்கள் உருவாகினார்கள். சிந்தனைகள் ஓலைச்சட்டங்களில் பதிவு செய்யப்பட்டு பேணப்பட்டன. அவற்றை நிறைய பேர் வாசித்தர்கள்.

இன்றோ நாம் கணனி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் செய்திகள் எமக்கு எட்டிக்கொண்டிருக்கின்றன. நிறையவே நூல்கள் பிரசுரமாகிக் கொண்டிருக்கின்றன. நூல் பிரதிகள் என்பது மிகவும் இலகுவான காரியமாகி விட்டது. சிறு தொகை செலுத்தி பெருமளவு நூல்களை கொள்வனவு செய்ய முடியும். எங்கும் வாசிகசாலை வசதிகள் உண்டு. அவை யாவற்றுக்கும் மேலாக விரும்பிய புத்தகத்தை கணனியிலேயே தெரிவு செய்து படிக்க முடியும். பத்திரிகைகள், சஞ்சிகைகள் யாவும் 'ஈ மெயிலில்' கிடைக்கின்றன.

ஆனால் நாம் என்ன செய்கின்றோம். வாசிப்பு பழக்கத்துக்கே மூடுவிழா நடத்திவிட்டோம். காலையில் எழுந்ததும் கணனியில் தான் கண் விழிக்கின்றோம். முக நூலை திறந்து 'ரைம்லைனில்' (Timeline). என்னென்ன புது விடயங்கள் வந்துள்ளன என்று தேடுகின்றோம். அநாவசியமான வீடியோக்களை தேடித்தேடிப் பார்க்கின்றோம்.

'புரோட் பாண்ட் ஸ்டுடன்ற் பக்கேச்' (Broad Band Student Package) ஒன்றை குறைந்த கட்டணத்தில் இலங்கை தொலைத் தொடர்பு கூட்டுத்தாபனம் அறிமுகம் செய்துள்ளதால் இணைய வசதி மாணவர்களுக்கும் இலகுவில் கிடைக்கின்றது. அவர்கள் அதனை சரியாக பயன்படுத்துகிறார்களா என பெற்றோர் கண்காணிக்க வேண்டும். இந்த வழியில் தான் இன்றைய சமுதாயத்தின் வாசிப்புப் பழக்கம் பாழாகியுள்ளதுடன் சிந்தனா சக்தியும் அருகியுள்ளது. இளம் சமுதாயத்தின் மனத்தில் புத்துணர்ச்சி ஏற்படாவிட்டால் தம்மை சார்ந்தவர்களை வெறுப்பர். பெற்றோர்கள், உறவினர்கள், அயலவர், நண்பர்கள் மேல் குரோதம் கொள்வர்!

அவர்கள் மனதில் சிந்திக்கும் ஆற்றலுக்குப்பதிலாக மற்றவர்களை நிந்திக்கும் பலவீனம் உண்டாகின்றது. மற்றவர்களை நிந்திப்பதன் மூலம் தமது பலவீனங்களை அவர்களால் மறைக்க முடிகின்றது. பெரியவர்கள் மட்டத்திலும் குடும்பங்கள் மட்டத்திலும் ஒருவரை மற்றவர் நிந்திப்பது சகஜமாகி விட்டது. நீங்கள் உங்கள் மனைவி பிள்ளைகளுடன் உங்கள் நண்பர் அல்லது உறவினர் வீட்டுக்கு 'விஸிற்' (Visit) பண்ணும் போது உங்களுக்கு அபார வரவேற்பும் பாராட்டும் கிடைக்கும். நீங்கள் விடைபெற்று சென்ற பின்னர் உங்களைப்பற்றிய அலசல் ஒன்று இடம்பெறும். அதில் உங்கள் மீதான பாராட்டுகளுக்கு அப்பாற்பட்ட சில கருத்துக்கள் இடம்பெறும். யாராவது ஒருவராவது உங்களை தூற்றி கதைப்பர். அதுவே நிந்தனை! இந்த நிந்தனை புறம் சொல்லுதலா என வினவலாம். அனேகமாக அப்படித்தான்! ஆனால் வேலை செய்யும் இடங்கள், விவாத மேடை, நூல் வெளியீட்டு நிகழ்வுகள் ஆகியவற்றில் நிந்தனைகளை முகத்துக்கு நேராக எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சஞ்சிகைகளில் வெளியாகும் படைப்புக்களுக்கு வரும் 'எதிர்வினைகளும்' சில சமயங்களில் நிந்தனைகளே. எம்மை நிந்திப்பவர்களையிட்டு நாம் அதிகம் அலட்டிக்கொள்ள தேவையில்லை. எவரும் அவர்கள் வார்த்தையை பொருட்படுத்தமாட்டார்கள்! ஆனால் சிந்தனாவாதிகளின் வார்த்தைகள் பெறுமதிமிக்கவை. அவர்களுடைய நல்லெண்ணத்தை பெறுவதில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

மகாபாரத போரின் முதலாம் நாள். தர்மவானான யுதிஷ்ரர் எதிர் அணியில் இருக்கும் பிதாமகரான பீஷ்மரை சந்தித்து அவரது கட்டளைக்காக பணிந்து நிற்கின்றார். துரியோதனன் அதனை தமக்கு வாய்த்த நல்லதொரு சந்தர்ப்பமாக கருதி, 'ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு பாண்டவர்களை சரணடைய கட்டளையிடுக' என பீஷ்மரை வற்புறுத்துகிறான். அப்போது பீஷ்மர்...... 'ஏய் துரியோதனா நான் மரணிக்கும்வரை அஸ்தினாபுரத்தை காத்து நிற்பேன் என்று மனத்தாலும் வாக்காலும் சத்தியம் எடுத்தவன்,. ஆனால் எனது ஆத்மா கூறுவதெல்லாம் இரண்டே இரண்டு விடயங்கள் தான். ஒன்று 'ஆசி' மற்றையது 'சாபம்!' என்று கூறி விட்டு, 'யுதிஷ்ரா! நீ இந்த கிழம் உட்பட எதிரிகள் அனைவரையும் அழித்துவிடு' என்று ஆசி வழங்குகின்றார்.

இப்போது கூறுங்கள் நாம் பயம் கொள்ள வேண்டியது சிந்திப்பவர்களுக்கா? நிந்திப்பவர்களுக்கா?

## குறுக்கெழுத்து புதிர் 024

முடிவுத் திகதி : 04.09.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | 14 | | ■ | ■ | 2 | 15 து | |
| | | | ■ | 16 | ■ | 3 | | ம |
| 4 | சு | 5 | ட் | | 17 | | 18 | |
| | 19 வ | | ■ | 6 | | | | ■ |
| | | | ■ | ரு | | ■ | 7 | 20 |
| ■ | 8 | | | | 9 | | | |
| 10 | | | | ம் | | | | 21 |
| ட் | | ■ | ■ | ■ | ம் | | | ம் |
| 11 | | | | ■ | ■ | 12 | | |

### இடமிருந்து வலமாக

1. தொடர் வெடி
2. ராடரின் தமிழ்ச் சொல்
3. ஆனையிறவிற்கு அப்பால் உள்ள ஊர்
4. அசுத்தத்தின் ஒத்த சொல்
5. வெள்ளையருக்கு எதிராகப் போராடிய இந்தியத் தமிழ் அரசன்
6. மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று
7. பூட்டுக்களைத் திறப்பது
8. இந்தியத் தமிழில் போராட்டத்தைக் குறிக்கும் சொல்
9. சிறு செடி கொடிகளைக்குறிக்கும் சொல்
10. துர்நடத்தையுள்ள மனிதன்
11. கண்ணகி உடைத்தது
12. மழை பெய்தால் தெருவில் உருவாகுவது

### மேலிருந்து கீழாக

1. வெகுமதியினைச் சொல்லலாம்
2. உடலுக்குள் இருக்கும் சளித் தன்மை
5. இராவணனை அரக்கனாக எழுதியவர்
9. தமிழருக்கு முக்கியமான பிரதேசத்தின் திசை
13. திருமணப் பொருத்தங்களில் ஒன்று
14. இவ்வுணர்வால் பெண் தலை கவிழ்வாள்
15. மாம்பழத்தில் வண்டுகள் இடுவது
16. துருவங்களில் ஒன்று
17. இலங்கையில் இது சரிந்துவருகின்றதாக வல்லுனர் கூறுவர்
18. விஜயதசமியில் கொல்லப்பட்ட அசுரன்-ஒரு எழுத்து குழம்பியுள்ளது
19. உதயம் என்ற சொல்லின் வடமொழிக் கலப்புச் சொல்
20. கண்ணாடியில் தெரிவது
21. தேர்தல்களில் உருவாகுவது

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

### புதிர் 023 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கோ | 12 ல | ம் | 2 அ | 13 சு | ம | ந் | த | ம் |
| ■ | ட் | ■ | ப் | ல | 14 தே | ■ | 15 ச | ■ |
| 3 து | டு | ப் | 16 பு | ப | 4 வ | ட் | ட | ம் |
| 5 ரோ | கி | ணி | ஸ் | ம் | கௌ | ■ | ல | ■ |
| ணா | கு | ■ | 6 ப | ட் | டா | 17 ள | ம் | 18 அ |
| ர் | 7 ஆ | 19 ர | ம் | ப | ம் | தா | ■ | ச் |
| ■ | 8 கொ | ட் | டை | ■ | ■ | ல | ■ | சா |
| 20 ரு | ■ | ச | ■ | 9 கி | ர | ய | ம் | ணி |
| 10 கு | ம் | கி | ■ | ■ | ■ | 11 ம் | வ | சி |

### பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*திருமதி. செல்வச்சோதி. ச*
*இல. 572ஏ, ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.*
*திரு. வீ. குணபாலன்*
*32/4, மத்தியவீதி, திருகோணமலை.*

## தேசிய SMS செய்திகள்

- **சனாதிபதியின் ஒரு நாள் செலவு**

ஜனாதிபதிக்கான ஒருநாள் செலவு 234 இலட்சமாகும். இவ்வளவு பாரிய தொகை தேவைதானா? என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் அழைப்பாளர் சங்கைக்குறிய மாதுலுவாவே சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

- **திடீர் விலை அதிகரிப்பு - மக்கள் திண்டாட்டம்**

சந்தையில் அரிசி விலை திடீரென உயர்வடைந்துள்ளமையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு இன்னும் இரண்டு வாரங்களில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் ஹேமால் குணசேகர தெரிவித்துள்ளார்.

- **பிரதமரின் பேச்சைக் கேட்க வேண்டும் - டக்ளஸ்**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோளை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

- **சக்தி - சிரச நிவாரண யாத்திரை**

வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள 14 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் வரையறுக்கப்பட்ட கெப்பிடல் மஹாராஜா நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள 'சக்தி சிரச நிவாரண யாத்திரை'க்கு பொருட்களை திரட்டும் பணிகள் 28.08.2014 அன்று ஆரம்பமாகின.

- **மேலும் இரு மாணவர்கள் கைது**

பேராதனை பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடம் அமைக்கப்பட வேண்டும் என கோரி போராட்டத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் மேலும் இரு மாணவர்களை கண்டி நீதிமன்ற நீதிவான் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

- **பிரதி இளவரசருக்கு அழைப்பு விடுப்பு**

இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு சவுதியின் பிரதி இளவரசர் முக்ரின் பின் அப்துல் ஹசீசுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பை ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் இலங்கைக்கான தூதுவர் விடுத்துள்ளார்.

- **வயல் காணிகள் வழங்கப்பட்டுவிட்டன - இராணுவ பேச்சாளர்**

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாப்பிலவு பிரதேசத்தில் இராணுவ தேவைக்காக எடுக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள வயல் காணிகளில் பயிர் செய்கையை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்று மக்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள். எனினும் இனியும் அவ்வாறான அனுமதி வழங்குவதற்குரிய காணிகள் எதுவும் இராணுவத்திடம் இல்லை என்றும் இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

- **வடக்கில் அபிவிருத்தி பணி நிறுத்தம்**

வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைபட்டுள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்' தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற திவிநெகும சலுகைக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தும் விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டார்.

- **போராட்டத்தை கைவிடுமாறு கோரிக்கை**

தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள அனைத்து கோரிக்கைகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுத்து வருவதால் பணிப் பகிஸ்கரிப்பை கைவிடுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, சுகாதார சேவை தொழிற்சங்கங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

- **அரிசியைப் பதுக்குவோருக்கெதிராக சட்ட நடவடிக்கை**

நாட்டில் உள்ள அனைத்து அரிசி ஆலை உரிமையாளர்கள், அரிசி ஏற்றுமதியாளர்கள் மற்றும் மொத்த கொள்வனவாளர்கள் தங்கள் வசமுள்ள அரிசி கையிருப்பு தொடர்பான விபரங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட வேண்டும் என நுகர்வோர் அதிகார சபை கேட்டுக் கொண்டுள்ளது. அதன் பின்னர் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை குறித்த தகவல்களை சமர்பிக்க வேண்டும் என அதிகார சபை தெரிவித்துள்ளது.

- **கடைகள் உடைப்பு**

ஹட்டன் நகரில் பல கடைகள் உடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவத்தின் போது எந்தவிதமான பொருட்களையும் திருடர்கள் கொள்ளையிடாமல் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

- **கடைகள் உடைப்பு**

இரத்தினபுரி நகரத்தில் அமைந்துள்ள அரச வங்கியொன்றில் வைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட ஒருவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அளவுக்கு மிஞ்சினால் ...

ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் இருப்பது கண்டறியப்படுகிறது. இவர்களில் சரிபாதிப் பேர்தான் புற்றுநோய்க்கான போரில் வெற்றிபெறுகின்றனர். 72 ஆயிரம் பெண்கள் உயிரிழக்கின்றனர். ஆனால், இது தவிர்க்கக்கூடிய நோய்தான். இதுபற்றி தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மட்டுமே கர்ப்பப்பை வாய் புற்றுநோயால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியும் என்கின்றனர் மருத்துவர்கள்.



"கர்ப்பப்பையின் கீழ்ப் பகுதியானது, பிறப்பு உறுப்பில் இணையும் இடத்தில் வாய் போன்ற அமைப்பில் 'ஹியூமன் பாப்பிலோமா வைரஸ்' என்ற கிருமியால் புற்றுநோய் ஏற்படுகிறது. பொதுவாக வைரஸ் கிருமி தாக்குதலின்போது பெண்ணின் நோய் எதிர்ப்பு சக்தியே, இதை எதிர்த்து வெற்றிகொள்கிறது. சில பெண்களுக்கு இந்தக் கிருமி சில காலத்துக்கு உடலுக்குள்ளேயே அமைதியாகக் காத்திருந்து நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள காலத்தில் தாக்குதல் நடத்துகிறது. இந்த நிலையில், இயல்பான செல்களில் மாற்றம் ஏற்படுகிறது. மாற்றம் அடைந்த இந்த செல்கள் அதிவேகத்தில் பெருக்கம் அடைகிறது. இவை இறப்பதும் இல்லை.

இந்த வைரஸ் கிருமி, பாலியல் உறவின் மூலமே பரவுகிறது. என்னதான் வைரஸ் கிருமி மூலம் புற்றுநோய் ஏற்படுகிறது என்றாலும், இளம் வயதிலேயே உடல் உறவு (15 வயது அல்லது அதற்கு கீழ்), பலருடன் உறவு, சிகரெட் பிடித்தல், சுகாதாரமற்ற நாப்கின் பயன்படுத்துதல் உள்ளிட்ட சில காரணிகள் கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கான வாய்ப்புகளை அதிகரித்துவிடுகிறது. ஹெச்.ஐ.வி. பாதிப்பு உள்ளவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும். இந்த நேரத்தில் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு செல்களால் ஹியூமன் பாப்பிலோமா வைரஸை எதிர்த்துப் போராட முடிவது இல்லை.


தொடரும்...

## குறட்டை ஒரு பிரச்சினையா?!



குறட்டை என்பது சாதாரண விடயம் அல்ல, அது உடலில் ஏற்படும் ஏதேனும் அசௌகரியத்தின் அடையாளமாகும். தூங்கும் போது பலரும் குறட்டை விடுவார்கள், இதனால் பக்கத்தில் உள்ளவர்களுக்கு தான் பெரிய தொந்தரவாக இருக்கும். நாள் முழுவதும் வேலை பார்த்து களைத்த மனிதன், வீட்டிற்கு வந்து படுத்து தன்னை மறந்து தூங்கும் போது, அவனிடமிருந்து குறட்டை சத்தம் எழும்.

**குறட்டை ஏன் வருகிறது?**




ஒருவர் தூங்கும் போது அவரது மூச்சுப் பாதை பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ அடைத்துக் கொள்கிறது. அந்த நேரத்தில் வாய் வழியாக சுவாசிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறு வாய் வழியாக மூச்சு விடும் போது உள்நாக்கு வேகமாக அசைந்து பேலர் மீது உரசுகிறது. இந்த அதிர்வு சத்தத்தையே நாம் குறட்டை என்கிறோம், குறட்டை என்பது ஒரு நோய் இல்லையென்றாலும் இதனால் வரும் பக்கவிளைவுகள் மிகவும் அதிகம்.

**விளைவுகள்**

தூங்கிக் கொண்டிருக்கும் போது இதய பாதிப்பு, ரத்த அழுத்தம், பக்கவாதம் போன்றவை ஏற்பட பெரும்பாலும் இதுவே காரணமாக அமைகிறது. அதிக உடல் எடை காரணமாக, வயிறு அல்லது கழுத்து அல்லது தொண்டைப் பகுதியில் அதிக கொழுப்பு சேர்ந்து விடும். இதனால், நுரையீரலால் நாம் ஆக்ஸிஜனை உள்ளிழுக்கும் போது தேவையான அளவுக்கு விரிவடைய இயலாமல் போகும்.

ஒருவரது ரத்தத்தில் ஆக்ஸிஜன் குறைந்து, கார்பன் டை ஆக்ஸைட் அதிகரித்து உடல்நிலை பாதிக்கப்பட நேரிடுகிறது. எனவே, குறட்டை தானே என்று எண்ணாமல், உடனடியாக மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டியது அவசியம்.

## தினமும் காபி சிறந்த மருந்து



தினமும் மூன்று கப் காபி அருந்துவதன் மூலம் கல்லீரல் புற்றுநோயை 50 சதவிகிதம் குறைக்கமுடியும் என்று ஒரு புதிய ஆய்வின் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் இது ஈரல் செல்லியல் புற்றுநோய் ஆபத்தை 40 சதவிகிதம் வரை குறைக்கக்கூடும் என்றும் இரைப்பை மற்றும் குடலியல் மருத்துவ அமைப்பின் சார்பில் வெளிவரும் அமெரிக்க மருத்துவ இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரல் செல்லியல் புற்றுநோய் என்பது உலகம் முழுவதிலும் காணப்படும் புற்றுநோயில் 90 சதவிகிதம் காணப்படுவதாகும்.

தங்களுடைய கடந்த கால ஆய்வுகள் காபி உடலுக்கு நல்லது, அதிலும் குறிப்பாக கல்லீரலுக்கு காபி நன்மையை செய்கின்றது என்று உறுதி செய்வதை ஆய்வாளரான கார்லோ லா வெக்கியா தெரிவிக்கின்றார். நீரிழிவு நோய் கல்லீரல் புற்றுநோய்க்கு ஒரு காரணியாக விளங்கக்கூடும் என்ற நிலையில், காபி குடிப்பது நீரிழிவு நோயைக் குறைக்கும் என்பது நிருபிக்கப்பட்ட ஒரு உண்மையாக உள்ளது.

கல்லீரல் மற்றும் செரிமான நோய்கள் உள்ளவர்கள் தாமாக முன்வந்து காபி குடிப்பதைக் குறைப்பதுவும்கூட காரணமாக இருக்கலாம் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## முன் கோபம்

குட்டிக்கதை

ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்த படி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப் படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை. அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப் படும் போதும் சம்பந்தப் பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மர வேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும் படி அறிவுரைத்தார்.



முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாட்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப் படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே! நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோபவெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாட்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது.

எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

மகனும் கருத்தை நன்றாக உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.

**நாவினால் சுட்ட வடு என்றும் ஆறாது.**

## சிந்திக்க .. ..

வளமுடன் வாழும் போது
நண்பர்கள் உன்னை அறிவர்:
வறுமையில் வாழும் போது,
நீ உன் நண்பர்களை அறிவாய்!!

## சிறுவர் முரசு






சி.சாளினி
திருகோணமலை.



க.சுபர்னா
திருகோணமலை.



கே.சுரேந்திரன்
மட்டக்களப்பு.

## குழந்தைகள் சாப்பிட அடம் பிடிக்கின்றனரா??



- உணவைக் கொண்டு வந்தாலே, கைகளால் வாயை நிரப்பிக் கொண்டு, உணவை கொடுக்க முடியாத அளவில் செய்வார்கள். அப்போது அவர்கள் முன்பு, அவர்கள் உணவை நீங்கள் சாப்பிடுவது போல் செய்தால், பின் அவர்கள் உணவை நீங்கள் சாப்பிடப் போவதால், அது பிடிக்காமல், பின் அவர்களே வாயிலிருந்து கையை எடுத்து விட்டு, உணவை வாங்கிக் கொள்வார்கள்.
- சில குட்டீஸ் வாயில் உணவை வைத்தால், அதை அப்படியே வைத்துக் கொண்டு இருப்பார்கள். அவர்களுக்கு அதை எவ்வாறு சாப்பிட வேண்டும் என்று தெரியாது. ஆகவே அப்போது அவர்கள் முன்பு நீங்கள் உணவை வாயில் வைத்து, மென்று காண்பித்தால், அதைப் அப்படியே அவர்களும் செய்வார்கள்.
- குழந்தைகள் சாப்பிடும் போது விளையாடிக் கொண்டே இருப்பார்கள். அதிலும் சில குழந்தைகள் உண்ணும் போது அவர்கள் கைகளால் எடுக்க முயல்வார்கள். முக்கியமாக அப்போது அவர்களுக்கு இடது கை தான் வரும். ஆகவே அத்தகைய குழந்தைகளுக்கு, நல்ல பழக்கத்தை சொல்லிக் கொடுக்கும் வகையில், அவர்களிடம் வலது கையால் எடுத்து சாப்பிட பழக்க வேண்டும். இதனால் அவர்களும் விருப்பப்பட்டு சாப்பிடுவார்கள்.
- குழந்தைகள் சாப்பிடும் வேளையில் அடிக்கொரு தடவை சாப்பிடு, சாப்பிடு குட்டி என்றெல்லாம் சொல்வதுண்டு. சாப்பாடு, சாப்பிடு என்னும் வார்த்தைகளை அவர்கள் உண்ணும் போது கூறாமல் வேறேதும் கதைத்துக் கொண்டு ஊட்டுதல் வேண்டும்.

- முற்றும் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. தீர்க்க $5x - 2(x-1) = 5x + 4$

02. ரூ 1000 க்கு வாங்கிய பொருளை ரூ 1040 இற்கு விற்றால் இலாப சதவீதம் எவ்வளவு?

03. கூட்டுத்தொகை யாது? $0.782 + 0.02$

04. $^{m}/_{4} = 6$ எனின் , m இன் பெறுமானத்தைக் காண்க.

05. பெறுமானத்தைக் காண்க. $(-3)^3$

06. ஒன்று ரூபா 3.25 ஆன 18 வாழைப்பழங்களின் விலை யாது?

07. ஏறுவரிசையில் எழுதுக. $^{3}/_{8}$ , $^{3}/_{7}$ , $^{3}/_{9}$

08. பரீட்சை ஒன்றுக்கு 8975 பரீட்சாத்திகள் தோற்றினர். இவர்களில் 3599 பரீட்சாத்திகள் சித்தியடையவில்லை எனின் , சித்தியடைந்த பரீட்சாத்திகளின் எண்ணிக்கை யாது?

09. என்னிடம் ரூபா x உம் தம்பியிடம் ரூபா 6 உம் உள்ளன. எங்கள் இருவரிடமும் உள்ள மொத்த தொகையைக் காட்டுவதற்கு ஓர் அட்சர கணிதக் கோவையை எழுதுக.

10. சுருக்குக. $1\frac{1}{4} \times (^{1}/_{3} + ^{2}/_{5})$


11. $a = 4$ , $b = -2$ எனின் , $2a^2 - 3b$ யின் பெறுமானத்தைக் காண்க.

12. தீர்க்க. $3m - 2(m - 2) = 3m + 5$

13. ரூபா 800 இன் $^{1}/_{5}$ எவ்வளவு?

14. ஒரு பேனையின் விலை ஒரு பென்சிலின் விலையின் மூன்று மடங்காகும். ஒரு பேனையின் விலை ரூபா 18 எனின் ஒரு பென்சிலின் விலையை காண்க.

15. PQRS ஓர் இணைகரம். PQ = 8cm, PT = 14cm, PS = 10cm எனின்,




1. RT இன் நீளத்தைக் காண்க.
2. PQRSன் பரப்பைக் காண்க.
3. முக்கோணி QRTன் பரப்பளவைக் காண்க.

16. தலையணை உறை தைப்பதற்கு 2 மீற்றர் பொப்ளின் துணி தேவை. 5 மீற்றரிலிருந்து தைக்கப்படத்தக்க தலையணை உறைகளின் எண்ணிக்கை யாது?

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
30.08.2014 முதல் பிரதி சனி தோறும் மு.ப10-12 வரை G.C.E (O/L) மாணவர்களுக்கான மாதிரி வினாப் பரீட்சை நடைபெறவுள்ளது. முன்கூட்டியே பதிவு செய்து பங்குபற்றவும்.

## பாடம் : விஞ்ஞானம்

01. மின்பகுப்பின் மூலம் மின்முலாமிடும் போது யாதாயினும் ஓர் உலோக மேற்பரப்பின் மீது நிலையான சீரான மின்முலாமிடுதலைப் பெறுவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?
   1. மின்பகுபொருளை அசையாமல் வைத்திருத்தல்.
   2. மின்பகுபொருளின் வெப்பநிலையைத் தொடர்ச்சியாக மாற்றுதல்.
   3. மின்பகுப்பிற்கு மிகச் சிறிய மின்னோட்டத்தைப் பிரயோகித்தல்.
   4. மின் முலாமிட வேண்டிய பொருளின் மீது கொழுப்புப் படையைப் பூசுதல்.

02. கடற்கரைப் பிரதேசத்தில் காணப்படும் ஒரு தாவரம் எது?
   1. இரைசோ போரா 2. ஐப்போமியா பைலேரியா
   3. ஐக்கோணியா 4. நெலும்பியம்

03. மனிதச் செயற்பாடுகள் காரணமாக இயற்கைச் சூழலின் சமநிலை விரைவாக மாறிப் பாதக விளைவாக வளிமண்டல ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம். இதனால் மனிதனில் நேரடியாக ஏற்படும் பாதக விளைவு எது?
   1. பூகோளம் வெப்பமாதல் 2. கடல் நீர் மட்டம் உயர்தல்
   3. சுவாச நோய்களுக்கு ஆளாதல் 4. தோல் புற்று நோய்க்கு ஆளாதல்

04. இலங்கையில் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பற்றீரியா இனம் ஒன்றைப் பயன்படுத்தல் பற்றி அண்மையில் சுகாதார அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்தது. இக்கட்டுப்பாட்டு முறைக்கு உதாரணம்.
   1. இரசாயனக் கட்டுப்பாடு 2. உயிரியல் கட்டுப்பாடு
   3. பௌதிகக் கட்டுப்பாடு 4. படுகொலை

05. 9g நீரில் உள்ள நீர் மூலக்கூறுகளின் எண்ணிக்கையைச் சரியாக எடுத்துக்காட்டும் விடையைத் தெரிந்தெடுக்க. (H=1, O=16, அவாகாதரோ மாறிலி $= 6.022 \times 10^{23} mol^{-1}$)
   1. $(6.023 \times 10^{23}) / 9 \times 18$ 2. $18/9 \times 6.022 \times 10^{23}$ 3. $9/18 \times 6.022 \times 10^{23}$
   4. $9 \times 18 \times 6.022 \times 10^{23}$

06. பல்கருக் கல வகை எது?
   1. மேலணிக் கலம் 2. மழமழப்பான தசைக்கலம்
   3. வெண் சிறுதுணிக்கைக் கலம் 4. வன்கூட்டுத் தசைக்கலம்

07. அல்காக்கள் பின்வரும் எவ்வியல்பு காரணமாகப் பங்கசுக்களிலிருந்து வேறுபடுகின்றன?
   1. உடலில் பிரிவிலிகள் இருத்தல்
   2. ஒளித்தொகுப்பு ஆற்றல்
   3. ஒழுங்கமைந்த கருக்கள் இருத்தல்
   4. இனப்பெருக்கத்திற்கான புணரிகளை உற்பத்தி செய்தல்

08. கைத்தொழில் துறையில் போன்று உணவுப் பொருள்களைத் தயாரிப்பதிலும் பல்வேறு நுண்ணங்கிக் கூட்டங்கள் பயன்படுகின்றன. நுண்ணங்கிக் கூட்டமாகிய பங்கசு பின்வரும் எவ்வுற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றது?
   1. உயிர்வாயு 2. பாண் 3. யோகட் 4. தயிர்

09. ஐதரசன் மூலகத்தின் மிகவும் அதிக அளவில் உள்ள சமதானி யாது?
   1. $^{1}_{1}H$ 2. $^{2}_{1}H$ 3. $^{3}_{1}H$ 4. $^{4}_{1}H$

10. கழிவுப் பொருள்கள் என்பன உடலின் உயிரசாயனச் செயன்முறைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேவையற்ற பொருள்களாகும். இதற்கேற்ப மனிதனின் உடலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருளாக அமையாதது?
   1. தோலிலிருந்து வெளியேறும் வியர்வை.
   2. சிறுநீரகங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் சிறுநீர்
   3. சுவாசத் தொகுதியிலிருந்து வெளியேற்றப்படும் நீர்
   4. உணவுக் கால்வாயிலிருந்து வெளியேற்றப்படும் மலம்.

## பாடம் : வரலாறு

1. இறந்த விலங்குகளை புதைக்கும் இடமாக எனது வயிற்றை வைத்திருக்க விரும்பவில்லை என கூறி மாமிசத்தை ஒதுக்கிய மன்னன்
1. அசோகன் 2. எல்லாளன் 3. அக்பர் 4. கனிஷ்கன்

2.

| | |
|---|---|
| அசேலன் | A. 1ம் இராஜஇராஜசோழன் |
| வங்கநாஸிகதிஸ்ஸன் | B. கரிகாலச்சோழன் |
| மித்தசேனன் | C. ஸ்ரீமாற ஸ்ரீபல்லவன் |
| 5ம் மகிந்தன் | D. எல்லாளன் |

மேற்படி ஆட்சியாளர்களுக்கு எதிராக படையெடுத்த அந்நியர்களின் ஒழுங்கு
1.ACDB 2.DBCA 3.DCBA 4.CDBA

03. டில்லி சுல்தான் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்த பிரதான விடயம்
   1. தலைநகர் வேதகிரிக்கு மாற்றப்பட்டமை
   2. இந்துக்களின் எதிர்ப்பை ஆட்சியாளர்கள் பெற்றமை
   3. பாபர் மன்னனின் படையெடுப்பு
   4. பலவீனமான ஆட்சியாளர்கள் ஆட்சிப்பீடம் ஏறியமை

04. கோட்டை இராசதானி காலத்தில் இலங்கை வந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக் கூடிய விடயம்
   A – கடலாதெனிய , லங்காதிலக விகாரை அமைப்பு
   B – சப்புமல்குமாரய ஆரியசக்கரவர்த்திகளின் ஆதிக்கத்தை ஒழித்தல்
   C – வெஸ்ட வோல் உடன்படிக்கை இடம்பெறல்
   D - ஸ்பில்பேர்கன் இலங்கை வருகை
   1.AC 2.BD 3.CD 4.AB

05. இலங்கையின் நீர்வள நாகரிக தொழினுட்பத்தில் நுண்ணளவுத் திட்டத்தில் கட்டப்பட்ட அதிசயக்கால்வாய் என கருதுவது
   1. வசபனால் கட்டப்பட்ட சுரங்கவழி நீர்ப்பாசனம்
   2. தாதுசேனனின் ஜயகங்கை கால்வாய்
   3. மகாசேனனின் பப்பதந்த கால்வாய்
   4. 1ம் பராக்கிரமபாகுவின் அங்கமட்டில்ல கால்வாய்

06. சமவுயரக் கோட்டிற்கு அமைவாகக் கட்டப்பட்ட பிரசித்தி பெற்ற வாவி
   1. மின்னேரியா வாவி 2. பராக்கிரமசமுத்திரம்
   3. கந்தளாய்குளம் 4. இராசதக்குளம்

07. குளத்தின் வான் கதவினால் ஆற்றப்படும் பணி
   1. குளக்கட்டை நீரரிப்பிலிருந்து பாதுகாத்தல்
   2. குளத்துக்குள் சேரும் அடையல், உக்கல்களைத் தடுத்தல்
   3. குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றல்
   4. குளத்தின் நீரை கால்வாய்க்கு விடுவித்தல்

08. மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைவது
   1. மராட்டியர், இராஜபுத்தர்களின் எதிர்ப்பு
   2. அக்பரின் கொள்கைகள் கைவிடப்பட்டமை
   3. பலவீனமான மன்னர்களின் ஆட்சி
   4. சாஜகானின் செயற்பாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சி

09. "வரலாறு என்பது புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் மனித குலத்தின் கடந்த காலத்தை பற்றி கற்பது என்ற கூற்றை வெளியிட்டவர்.
   1.ஹெரடோரஸ் 2.ஸ்ருவர்ட் பிகொட்
   3.பேர்க்ஹாட் 4. ஜவகர்லால் நேரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர் : அகிலன்**

## Grammar

Ex 01: Read the situations and write sentences. Choose one the following word.
arrive, break, lose, improve, grow, go up
1. Last week the bus fare was 80pence. Now it is 90. ..............................
2. Mike is looking for his key. He can't find it. ..................
3. This morning I was expecting a letter. Now I have it. ..........
4. Maria's English wasn't very good. Now it is much better. .......................
5. Tim didn't have a beard last month. Now he has a beard. .................
6. Margaret can't walk and her leg is in plaster. She. ......................

Ex 02: You are asking somebody questions about things he or she has done. Make questions from the words in brackets.
1. (ever/ ride/ horse?) Have you ever ridden a horse?
2. (ever/ be/ California?) ........................................
3. (ever/ run/ marathon?) ........................................
4. (ever/ speak/ famous person?) ..............................
5. (always/ live/ in this town?) ..............................
6. (most beautiful place/ ever/ visit?) ........................

Write a note.
Roli wants to tell his brother Krish that he has gone to the temple. After that he is going back to the office.

## முத்தமிழ் சங்கம்....

இலக்கிய நிகழ்வுகள் இலக்கிய ஆர்வலர்களால் திருகோணமலையில் நடாத்தப்பட்டமை நாம் அறிந்ததே. இவற்றில் இரு மாதங்களுக்கொருமுறை நடாத்தப்பட்ட அரங்காடல் நிகழ்வு, தமிழ்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு நிகழ்வு என்பன குறிப்பிடக்கூடிய நிகழ்வுகள் ஆகும். இந் நிகழ்வுகளின் ஒழுங்கமைப்பாளர்கள், மற்றும் கலை இலக்கிய ஆர்வலர்கள் ஒன்றிணைந்து ஒரு பெயரில் இயங்க வேண்டும் என்ற இலக்கிய ஆர்வலர்களின் வேண்டுகோளிற்கு அமைவாக இச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் செயற்பாடுகள் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஆற்றுகை செய்யப்படுவதோடு. அரங்கியல் பயிற்சிப்பட்டறைகள், பிரதேச கலை இலக்கியவாதிகள் கௌரவிப்பு. நூல் வெளியீடு மற்றும் மறைந்த கலைஞர் நினைவேந்தல் நிகழ்வுகள் , கலை இலக்கியப் போட்டிகள் எனபனவும் விரைவில் நடாத்தப்பட இருப்பதாக தெரிவித்தார்கள்.

## குடியேற்றத்தைத்....

தமிழ் பேசுபவர்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி உறுதியாகி, தீவிரமான முடிவுகளை நோக்கிச் செல்லாமல் வன்முறையற்ற செயற்பாடுகளை முன்னெடுத்தால் சர்வதேச நம்பிக்கையை வெற்றெடுக்கலாம் என்று தெரிவித்ததாகவும் திரு.இரா.சம்பந்தன் த ஹிந்து நாளிதழுக்குத் தெரிவித்துள்ளார்.

## உணவு அருந்தாமல் ....

ஓய்வின்றித் தொடர்ந்து 12 மணி நேரம் எழுதி இச்சாதனையைப் புரிய விரும்புவதாகத் தெரிவித்தார். "சேகுவேரா" என்ற குறுநாவலுடன் ஆரம்பமான இவரது எழுத்தில் தற்போதுவரை 25 புத்தகங்கள் வெளி வந்துள்ளன.

அவரது உலக சாதனை முயற்சி வெற்றிபெற மலைமுரசும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

## அரிசிமலை.....

இதன்போது வாக்குறுதியளிக்கப்பட்டது.

எனினும் கடந்த 26ம் திகதி காவல்துறை பாதுகாப்புடன் அங்குவந்த நிலஅளவையாளர்கள் மக்களின் காணிகளுக்குள் நின்று காவல்துறை பாதுகாப்புடன் அளவீடுகளை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு விரைந்த மூன்று கிராமங்களையும் சேர்ந்த சுமார் 600க்கும் மேற்பட்ட மக்கள், நிலஅளவீட்டை உடனடியாக நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போதே பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. அதன்போது பொதுமக்களில் ஒருவர் காயமடைந்தார்.

அரிசிமலை பகுதியை அண்மித்துள்ள பொன்மலைக்குடா, வீரந்தீவு மற்றும் தேத்தாவடி தீவு ஆகிய கிராமங்களை ஊடறுக்கும் வகையிலேயே இந்த நில அளவை மேற்கொள்ளப்படவிருந்ததாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

அங்கு அமைக்கப்பட்டுள்ள விஹாரையை அண்மித்ததாகவே இந்த மூன்று கிராமங்களும் இருக்கின்றன என்று தெரிவித்த மக்கள், இந்த கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 135 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் புல்மோட்டையில் தங்களுடைய உறவினர்கள் வீடுகளில் இன்னும் வாழ்ந்துவருவதாக சுட்டிக்காட்டினர். அவர்களை அவர்களது காணிகளில் குடியேற்றாமல் அளவையைச் செய்தால் அவர்களது காணிகள் இழக்கப்பட்டுவிடும் என மக்கள் போராடியதை அடுத்து தற்காலிகமாக அளவைப் பணிகள் பின்தள்ளப்பட்டுள்ளன.

## "தீ பற்றியது"

(கதிரவன்)

பண்ணை வீதியிலுள்ள ஸ்ரீபவளராசா என்பவரின் வீடு திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது. காரணத்தை ஆராய்ந்த போது சுவாமி அறையில் கொழுத்தப்பட்ட விளக்கே காரணம் எனத் தெரிந்தது.



## மகளிர் இராணுவத்தின்...

இராணுவத்தில் இணைந்து கொண்டுள்ளார். கடந்த 23.08.2014 நடைபெற்ற பயிற்சி நிறைவு தினத்தில் திருகோணமலையின் 16 வீராங்கனைகளும். மட்டக்களப்பின் 15 வீராங்கனைகளும், அம்பாறையிலிருந்து 5 வீராங்கனைகளும் பயிற்சியினை நிறைவு செய்தவர்களாவர். இவர்களுள் தேர்வு செய்யப்பட்ட எண்மருக்கு ஸ்கூட்டர்கள் கிழக்கு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேராவால் வழங்கி வைக்கப்பட்டன.

இவர்களின் அணி வகுப்பு மரியாதையை பிரிகேடிய ஆர். சண்முகநாதன் ஏற்றுக்கொண்டார். இவர்களுள் மண்டூர் கிராமத்ததைச் சேர்ந்த தெய்வேந்திரம் ரஞ்சிதா சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டு பட்டி அணிவிக்கப்பட்டார்.

## மாணவர்களின் எதிர்காலத்தை...

இவ்விடயங்களில் மாணவர்கள் சம்பந்தப்படுவது தொடர்பாக மிகக் கவனமாகத் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை வளாகத்தின் முதல்வரைத் தற்காலிகமாகப் பணிநீக்கியது தொடர்பாக மாணவர்கள் தாமாகவே முன்வந்து நடத்தியதாகக் கூறப்பட்ட சத்தியாக்கிரகம தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து கொழும்பில் நடைபெற்ற ஊர்வலம் தொடர்பாகவும், அவ் ஊர்வலத்தின் பின்னர் இலங்கைத் தேசிய மாணவர் சங்கத்தின் தலைவர் தாமர குணரத்ண ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி தொடர்பாகவும் தமது கண்டனத்தை தெரிவித்து கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் அறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழகத் துணைவேந்தரே திருமலை வளாகத்தின் முன்னாள் முதல்வர் வைத்தியர் வர்ணகுலேந்திரனைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்தார் என்று மேற்சொன்ன செவ்வியில் தெரிவிக்கப்பட்ட கூற்று முற்றுமுழதான பொய் எனத் தெரிவித்துள்ள அவ்வறிக்கை துணை வேந்தரையும் பல்கலைக்கழகத்தையும் பற்றிய தவறான அவதூறைப் பரப்பும் செயலாகவே இதனைக் கருதுவதாகவும் தெரிவித்துள்ளது.

இப்பணி நீக்கமானது பல்கலைக்கழக நிர்வாக சபையின் அனைத்து உறுப்பினர்களினதும் ஏகோபித்த முடிவு எனத் தெரிவித்துள்ள அறிக்கை 2012ம் ஆண்டிலிருந்து பணி நீக்கப்பட்டவருக்கு எதிராக நிர்வாக ஒழுங்கு முறைகளை மீறியமை, பணிதுறை ஒழுக்கத்திற்கு மாறான நடத்தை மற்றும் பல தடவைகள் நிர்வாகக் கூட்டங்களின் போது நெறிமுறைப் பிறழ்வு ஆகிய குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்துள்ளது.

அத்துடன் இவ்வறிக்கையில் நிதிமோசடி மற்றும் நிதி விரயம் தொடர்பாக 2013ம் ஆண்டு யூலை மாதம் நிர்வாக சபையினால் அனுப்பி வைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் செயற்பாடுகளை முன்னெடுக்க விடாமல் மாணவர்களைக் கொண்டு தடுத்த நடவடிக்கையின் அடிப்படையில் மோசடிகளையும் விரயங்களையும் வெளிக்கொணர விடாமல் மறைக்கும் முன்னேற்பாடு வெளித்தெரிவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கில்....

இந்த பகுதியில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருவதுடன் மக்களின் விவசாய செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 131 குளங்களில் 120 குளங்கள் முற்றாக நீர் வற்றியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கமல சேவைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக 12,000 நன்னீர் மீன்பிடியாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 10,180 குடும்பங்களைச் சேர்ந்த 31,278 பேர் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு குடிநீருக்கு பாரியளவில் தட்டுப்பாடு நிலவி வருவருகின்றது.

விவசாயம் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ளதால், தமக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 36,882 குடும்பங்களைச் சேர்ந்த1,28,500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீர் நிலைகளின் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளதால் கால்நடைகள் நீர் அருந்த முடியாத நிலை காணப்படுகின்றது.

# மீள்குடியேறி 8 வருடம் காணி உறுதி இன்றி மண்முனை மக்கள்

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்டு எட்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், பாதிக்கப்பட்ட தமக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கான ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இந்தப் பகுதியில் 1,476 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வசிக்கின்ற போதிலும், 75 குடும்பங்களுக்கு மாத்திரமே காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பாதிக்கப் பட்டவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வித வசதிகளுமற்ற இந்தப் பகுதியில் வசிக்கும் தாம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கல்வி, தொழில்வாய்ப்பு, திருமணம் என்பன காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படாமையால் தடைப்பட்டுள்ளதாக சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர்.

மண்முனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கொக்குவில் பகுதியிலுள்ள 243 குடும்பங்களும், பனிச்சையடி பிரதேசத்தில் 350 குடும்பங்களும், திராய்மடு சுவிஸ் கிராமத்தில் 424 குடும்பங்களும், உப்போடை கிராமத்தில் 43 குடும்பங்களும், நொச்சிமுனை பிரதேசத்தில் 341 குடும்பங்களும் இதுவரை காணி ஆவணங்கள் வழங்கப்படவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளன.

இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு விரைவில் காணிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம் சார்ல்ஸ் தெரிவித்தார்.

# தொழில்நுட்பப் பாடஆசிரிய வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

க.பொ.த. உயர்தரப்பிரிவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில் நுட்பவியல் பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகள் ஆகியோரை இலங்கை ஆசிரியர் சேவையில் இணைத்து கொள்வதற்கு கல்வியமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

புதிய தொழில் நுட்பவியல் பாடத்திட்டத்தின் கீழ் உயிர்முறைமைகள் தொழில் நுட்பவியல் மற்றும் தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களையும் கற்பிப்பதற்கு தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பட்டதாரிகளை ஆசிரியர் சேவை தரம் 3-1ற்குள் ஆட்சேர்ப்பு செய்ய விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதே போல் புதிய தொழில் நுட்பவியல் பாடத்திட்டத்தின் கீழ் பொறியியல் தொழில் நுட்பவியல் பாடத்தினை கற்பிப்பதற்கு தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல தொழில் நுட்ப டிப்ளோமாதாரிகளை ஆசிரியர் சேவை தரம் 3-1 ற்குள் ஆட்சேர்ப்பு செய்ய விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்கான இயந்திரவியல் தொழில்நுட்பம் கட்டுமாணத்தொழில் நுட்பம் மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில் நுட்பம் தொடர்பிலான டிப்ளோமாதாரிகள் விண்ணப்பிக்க முடியும்.

மேற்குறிப்பட்ட பாடங்களில் பட்டங்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் எதிர்வரும் செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரவு தொழுகை இரண்டு. இரண்டா!!

ஒரு மனிதர் இரவுத் தொழுகையைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார் அதற்கு நபி (ஸல்) அவர்கள் இரவுத் தொழுகை இரண்டு, இரண்டாகும். சுப்ஹை பயந்தால் (ஒரு ரக்கத்து) வித்ரை தொழவும். புகாரி, முஸ்லிம்.

இந்த ஹதீஸின் மூலம் இரவுத் தொழுகை குறிப்பிட்ட எண்ணிக்கை இல்லாமல் எவ்வளவும் தொழலாம். என்று சில அறிஞர்களை மேற் கோள் காட்டி பேசியும், எழுதியும், வருவதை காணலாம். இது சரிதானா? அல்லது எப்படி அணுக வேண்டும்? என்பதை ஹதீஸ்கள் மூலம் விளங்கிக் கொள்வோம்.

இரவுத் தொழுகை சம்பந்தமாக மேற்ச் சுட்டிக் காட்டிய ஹதீஸ மட்டும் வந்திருந்தால் இரவுத் தொழுகைக்கு எண்ணிக்கை இல்லை, எவ்வளவும் தொழலாம் என்ற முடிவுக்கு வரலாம். ஆனால் எண்ணிக்கையோடு பல ஹதீஸ்கள் வந்திருப்பதால் அதையும் பார்த்து விட்டு ஒரு முடிவுக்கு வருவோம். ரமலானில் நபி(ஸல்) அவர்களின் இரவுத் தொழுகை எவ்வாறு இருந்தன என்று கேட்கப்பட்ட போது அதற்கு ஆயிஷா(ரலி) அவர்கள் ரமலானிலும், ரமலான் அல்லாத காலங்களிலும், பதினொன்ரைத் தவிர அதிகப்படுத்தியது கிடையாது.

தொடரும் ..




# வாழைப்பழ சாக்லெட்



**தேவையான பொருட்கள்**

கனிந்த வாழைப்பழம் - 10, பால் பவுடர் - அரை கப், சர்க்கரை - முக்கால் கப், கொக்கோ பவுடர் - 2 மே.க, வெண்ணெய் - அரை கப், மெலிதக சீவிய முந்திரி, பிஸ்தா - 4 தே.க

**செய்முறை**

கொக்கோ பவுடர், பால் பவுடர் இரண்டையும் சலித்து வைத்துக் கொள்ளவும். வாழைப்பழத்தை மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். முந்திரி, பிஸ்தா பருப்புகளை நெய்யில் வறுத்துக் கொள்ளவும். அடி கனமான, வாயகன்ற ஒரு பாத்திரத்தை ஸ்டவ்வில் வைத்து, வாழைப்பழக்கூழ், சர்க்கரை சேர்த்துக் கிளறவும். சுருண்டு வந்ததும், பால் பவுடரைத் தூவி, வெண்ணெயைப் போட்டுக் கிளறவும், தீயைக் குறைத்து, கலவை கையில் ஒட்டாத பதம் வரும்வரை கிளறவும். பிறகு, நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டி சமமாக்கி, முந்திரி, பிஸ்தா துண்டுகளை மேலே தூவவும். ஆறிய பின் வில்லைகள் போடவும். ஒரு வாரம் வரை இந்த சாக்லேட்டை வைத்திருக்கலாம். வாழைப்பழம் சாப்பிடாத குழந்தைகளுக்குக் கூட மிகவும் பிடிக்கும்.




# வாரமொரு ஜோக்


- அருணன் -

அந்த மனநோய் மருத்துவமனைக்கு புதிதாக வந்த வைத்தியர் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த விடுதிக்கு நோயாளர்களை பார்யையிட சென்றுகொண்டிருந்த போது ஒரு விடுதியிலிருந்த சில மனநோயாளிகள் சுவரின் ஒரு பகுதியில் தங்கள் காதுகளை அழுத்தி வைத்துக் கொண்டு எதையோ அவதானத்துடன் கேட்டுக்கொண்டிருந்ததை கண்டு ஆச்சரியமடைந்தவராக அவர்களிடம் சென்று என்ன விடயம் என வினவினார். அவர்கள் அதற்கு பதிலேதும் கூறாமல் தங்கள் உதட்டில் விரல் வைத்து சத்தம் போடாமல் வைத்தியரை அவ்விடம் விட்டகலுமாறு சைகையினால் தெரிவித்தனர். வைத்தியரும் நமக்கேன் வேண்டாத வேலை என நினைத்தவராக தனது விடுதிக்கு சென்றார்.

பின் மீண்டும் நள்ளிரவு நோயாளியை பார்வையிட சென்ற அவர் அந்த மனநோயாளிகள் அதே நிலையிலேயே சுவரில் காதை வைத்திருந்தபடியே நின்றுகொன்டிருந்ததை கண்டு ஆச்சரியமடைந்தவராக காலையிலிருந்து நள்ளிரவுவரை அப்படி என்னதான் செய்கிறார்கள் என்ற ஆவலில் அவர்களிடம் சென்று என்ன விடயம் என வினவினார். அவர்களோ காலையில் அவருக்கு கூறியவாறே உதட்டில் விரலை வைத்து சத்தம் போடாமல் அவ்விடத்திலிருந்து நகருமாறு வேண்டினார்.

நமது வைத்தியருக்கோ சஸ்பென்ஸ் தாங்க முடியவில்லை. அவர்களை சற்று விலக்கிவிட்டு தானும் தனது காதை சவரில் அழுத்திவைத்து பார்த்தார். .அந்த வெறும் சுவரில் அவர் காதுகளுக்கு எதுவுமே கேட்கவில்லை. கோபமடைந்த வைத்தியர் அந்நோயாளிகளை பார்த்து எதுவுமே கேட்கவில்லையே.. பின்னர் ஏன் இவ்வாறு சுவரில் காதுகளை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றார். அவர்கள் வைத்தியரை பார்த்து கோபமாக இவ்வாறு கூறினார்கள்.

யோவ்! உமக்கு ஏதாவது அறிவு இருக்கின்றதா? இன்று அதிகாலை யிலிருந்து இந்த நள்ளிரவு வரை காதை வைத்துக்கொண்டிருந்த எங்களுக்கே எதுவும் கேட்கவில்லை இப்போது வந்த உமக்கு எப்படி கேட்கும்! என்றனர்.




# கத்தேரிக்கா! குண்டு கத்தேரிக்கா



இன்றைய சூழலில் உடல் பருமன் ஒரு வகையான வியாதி மட்டுமல்ல எல்லா வகையான வியாதிகளுக்கும் அதுவே மூலக்காரணமாய் அமைகிறது. உடல் எடையை குறைப்பதற்காக எந்த பயிற்சியும் செய்யாமல், தொலைக்காட்சி விளம்பரங்களில் வரும் பவுடர் மாத்திரையை நம்பி தோற்றுப் போகின்றனர். அதற்குப் பதிலாக இயற்கை நமக்கு அளித்துள்ள உணவு முறையை பின்பற்றினாலே போதும்.

- சாதம், இட்லி, தோசை உணவுகளை தவிர்த்து, தினமும் ஐந்து கப் காய்கறி அல்லது பழம் சாப்பிட வேண்டும். கீரை, பீன்ஸ், அவரைக்காய் போன்ற காய்கறிகளையும், புடலங்காய், பூசணி போன்ற கொடிவகைக் காய்கறிகளையும் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும், கிழங்கு வகைகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.
- இரவில் உணவுக்கு பின், தூங்க செல்வதற்கு முன், பால் அருந்துவதை தவிர்க்க வேண்டும். உணவில் தேங்காய் பயன்பாட்டை அறவே குறைக்க வேண்டும்.
- பப்பாளிக் காயை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். முள்ளங்கியை அதிகளவு சேர்த்துக் கொள்வதும் நல்லது.
- இஞ்சியை இடித்து சாறு எடுத்து, அடுப்பில் கொதிக்க வைக்க வேண்டும். சாறு சற்று சுண்டியதும், தேன் விட்டு சிறிது நேரம் கழித்து இறக்கி, ஆற வைக்க வேண்டும். காலை உணவுக்கு முன் ஒரு கரண்டியும், மாலையில் ஒரு கரண்டியும் உட்கொண்டு வெந்நீர் அருந்தி வந்தால் 40 நாளில் தொப்பை இருந்த இடம் தெரியாது.
- வாழைத் தண்டு சாறு, பூசணி சாறு, அருகம்புல் சாறு என மூன்றில் ஏதாவது ஒன்றை தினமும் குடித்து வந்தால் உடல் எடை குறையும்.

முற்றும் .. ..

# கொட்டியாபுரத்து சிங்கம்

**சம்பூர் சதீஸின்**

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வழ தொடர்ச்சி .. ..

பறங்கியர் கண்டி நகரைக் கைப்பற்றும் நிலை ஏற்பட்டால் கண்டி மக்கள் யாவரும் கைதிகளாகி சித்திரவதைக்குள்ளாக நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டதால் கண்டி மக்களில் பெரும்பாலானோர் விசுவாசத்தோடு கண்டியரசுப் படைகளில் இணையத் தொடங்கினர்.

இனி .. ..

இது மன்னனுக்கு பெரும் வாய்ப்பாக அமைந்தது.

இவ்வாறாக கண்டியரசுப் படைகளில் ஏறத்தாழ 40,000 பேர் இருந்தனர். இவர்கள் விற்படை, ஈட்டிப்படை, புரவிப்படை, வாட்படை, சுடுகலன் படை என்பவற்றில் உள்ளடக்கப்பட்டனர். புரவியேற்றத்தில் வல்லவனான இளஞ்சிங்கன் புரவியில் செல்லும் போதே குறிதவராது ஈட்டியெறியும் திறனையும், புரவி மீதிருந்தவாறான வாட்பயிற்சியும் இராஜசிங்கனின் முக்கிய பிரிவான புரவிபடைக்கு அவனைத் தலைவனாக்கியது. ஒரு நூறு பேர்களைக் கொண்ட இப்படையை ஒரு நாள் அவகாசத்துக்குள் சீரமைத்தான் இளஞ்சிங்கன். இதற்கு அவனது சிங்கள மொழிப் பயிற்சி பெருமளவில் உதவியது. இளஞ்சிங்கனது வீரத்தைக் கண்ட மன்னனும் இராஜசிங்கனும் அவனது வீரத்தைப் பாராட்டினர். அதுமட்டுமல்லாது கண்டி அரசன் இளஞ்சிங்கனிடம் உனது வீரத்தால் இப்போரில் ஒரு முக்கிய திருப்புமுனை ஏற்படப்போகின்றது என வாழ்த்தினார்.

இளஞ்சிங்கனும் பதிலுக்கு கொட்டியாபுரப்பற்று சார்பாக எனக்கு இச் சந்தர்ப்பத்தை வழங்கிய தங்களுக்கு மிக்க நன்றி அத்தோடு பறங்கியருக்கெதிராக மேற்கொள்ளப்படும் இப்படியொரு சந்தர்ப்பத்தையே நான் இவ்வளவு நாளும் எதிர்பார்த்துக் காத்திருந்தேன் என்று உணர்ச்சிபூர்வமாகக் கூறினான்.

**கண்டி படையெடுப்பு**

பெரும்படையுடன் வந்து கொண்டிருந்த டீ சா சிறந்த ஒரு போர்த்தலைவன் என்றும் அவனுடைய போர்த்தந்திரங்கள் தென்னிந்திய கோவா, கொச்சின் மற்றும் சோழமண்டலம் முழுவதும் பிரசித்தி பெற்றவை என்று மன்னன் செனரத் தான் கேள்விப்பட்டிருந்தவை பற்றி நினைத்துப் பார்த்தான். இப்போரானது கண்டி இராச்சியத்தின் தலைவிதியையே மாற்றக் கூடியதாக இருக்கப் போகின்றது என்றெண்ணி யவாறு சிந்தனையிலீடுபட்டுக் கொண்டிருக்கும் போது இளவரசர்கள் மூவரும் தந்தையின் முன் வந்து வணங்கி நின்றனர்.

தந்தையின் நிலையைக் கண்டதும் இராசசிங்கன் தந்தையே கவலை வேண்டாம் நாங்கள் பறங்கியரை ஓடோட விரட்டியடிப்போம். அவர்களுக்கு அடிமையாகி வாழும் வாழ்வு எமக்குத் தேவையில்லை. நிச்சயம் நாம் அவர்களை வெல்வோம். நண்பன் இளஞ்சிங்கனின் வீரமும் நமக்கு உதவியாக இருக்கும் என்று கூறினான். அத்தோடு உரையாடலைக் கைவிட்டு நால்வரும் போருக்கான உடையணிந்து தங்கள் குல தெய்வத்தை வழிபட்டு விட்டு யுத்த சைன்யங்கள் இருக்குமிடம் நோக்கி நடந்தனர்.

இவர்களைக் கண்டதும் வாழ்த்தொலி களும் பேரிகைகளும் முழங்கின. இவைகளின் சத்தம் வானைப் பிளக்கும் வண்ணமாயிருந்தது. செனரத் மகாராஜா, பறங்கியரைப் புறமுதுகோட்டிய வீரர், கண்டி இராசதானியின் நிகரில்லா தலைவர் தன் புதல்வர்களுடன் வருகின்றார் என்று முரசறைவிப்போன் தெரிவித்தான். வாழ்த்தொலிகளைச் சைகைகளால் [illegible] மன்னன் முப்பெரும் பிரிவுகளாயிருந்த படைவீரர்களின் அணி வகுப்பைப் பார்வையிட்டு திருப்தியடைந்தார். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து நின்ற சேனைகளையும் அவர்களின் முகங்களில் தென்பட்ட யுத்த வேட்கையும் மன்னனுக்கு வெற்றியை உறுதிப்படுத்தின. ஏற்கனவே தீட்டியிருந்த திட்டங்களின் படி, பட்டத்து இளவரசன் குமாரசிங்கன் தலையிலான படையணிகள் டீ சாவை பெலிகல் ஓயாவுக்கு அண்மையில் சந்திப்பதென்று முடிவாகியது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு கோட்டையை கைப்பற்றும் முயற்சியில் தானடைந்த தோல்விக்கு பழி வாங்குவதற்காக குமாரசிங்கன் துடித்துக் கொண்டிருந்தான்.



விஜயபாலாவை மாத்தளைக்கு அனுப்பி அங்கு நிலை கொள்ளுமாறும் தேவைப்பட்டால் அழைத்துக் கொள்வதாகவும் கூறப்பட்டது. அவனும் கிழக்கு மாகாணத்தினூடாக வரும் பறங்கிப் படையை எதிர்நோக்கியவாறு படையை வழிநடத்தினான். குமாரசிங்கன் தனது படைகளை பெலிகல் ஓயாவை நோக்கி வழிநடத்தினான். படைவீரர்களும் புதிய உத்வேகத்துடன் அணிவகுத்துச் சென்றனர். அவர்கள் மலைக் கணவாய்களினூடாக புதியதொரு நதிப்பிரவாகம் போல அணிவகுத்து மலையகக் காட்சிக்கு மெருகூட்டினர். ஆனால் இதை இரசித்து அனுபவிக்கக் கூடிய மனநிலையில் அங்கு யாருமேயில்லை. கண்டியப் படைகள் பறங்கிப் படையை எதிர்க்குமிடத்தை இரண்டு நாட்களுக்கு முன்னரே அடைந்து நிலையெடுத்துக் கொண்டன.



செனரத் மன்னனும், குமாரசிங்கனும் தங்கள் படைகளுக்குத் தேவையான உணவுகள் முதலான வசதிகளை கவனித்துச் செயற்படலாயினர்.

... பாகம் 14
தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விளையாட்டு நிகழ்வு

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து நடாத்தும் மாவட்ட விளையாட்டு விழாவும் தேசிய வீரர்கள் கௌரவிப்பும் கடந்த கனிக்கிழமை 23.08.2014 அன்று மகிழடித்தீவில் உள்ள பொது மைதானத்தில் காலை மரதன் ஓட்ட நிகழ்வுடன் ஆரம்பித்து பி.ப2.30 மணிக்கு மற்றைய நிகழ்வுகள் அனைத்தும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது வெற்றியீட்டிய வீரர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டதுடன் மாவட்ட விளையாட்டு நிகழ்வு புத்தகம் ஒன்றும் வெளியிடப்பட்டதுடன் இவ்வருட மாவட்ட போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்று மண்முனை வடக்கு பிரதேச செயலகம் முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.






## கலப்பு இரட்டையர் பிரிவில் வெளியேற்றம்

உலக சாம்பியன்ஷிப் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா தருண் கோனா ஜோடி தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது. டென்மார்க்கின் கோபன்ஹேகனில் திங்கட்கிழமை தொடங்கிய இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்திய ஜோடி 1621, 2527 என்ற செட் கணக்கில் டென்மார்க் ஜோடி ஆண்டர்ஸ் கிறிஸ்டியன் ஜூலி ஹவுமன் ஜோடியிடம் வீழ்ந்தது.

## அமெரிக்க டென்னிஸ் முன்னணிகள் முன்னேற்றம்



அமெரிக்க பகிரங்க டென்னிஸ் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றுக்கு, சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறினர். அமெரிக்காவின் நியூயார்க் நகரில் அமெரிக்க பகிரங்க கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அவுஸ்திரேலியாவின் மரின்கோ மடோசேவிச் மோதினர். அபாரமாக ஆடிய பெடரர் 6-3, 6-4, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

## விராட்டின் தோல்விக்கு யார் பொறுப்பு

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கட் தொடரை சமப்படுத்தியுள்ள இலங்கை அணி நாளை நடைபெறவுள்ள தீர்மானம் மிக்க கடைசி போட்டியை நம்பிக்கையுடன் எதிர் கொள்ளவுள்ளது. இந் நிலையில் இரண்டாவது போட்டியில் விளையாடிய அதே வீரர்கள் நாளைய போட்டியிலும் களம் இறக்கப்படுவர் என நம்பப்படுகின்றது. ஏனெனில் முதலிரண்டு போட்டிகளுக்கு பெயரிடப்பட்டிருந்த வீரர்களையே மூன்றாவது போட்டிக்கான இலங்கை குழாமிலும் தெரிவாளர்கள் பெயரிட்டுள்ளனர்.



## சர்வதேசச் செய்திகள்

- **நாடு திரும்பாவிடில் பதவி நீக்கம்**

கினியா நாட்டில் எபோலா விஷக்காய்ச்சல் மிக அதிகமாக பரவி வருகிறது. இந்த விஷக்காய்ச்சல் காரணமாக லைபீரிய அதிபர் கடந்த சில நாட்களுக்கு முன்னர், வெளிநாட்டு சுற்றுலாவில் இருக்கும் அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் உடனடியாக நாடு திரும்ப வேண்டும், அவ்வாறு நாடு திரும்பாமல் இருக்கும் அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகளை பதவியில் இருந்து நீக்க அதிபர் ஜான்சன் அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார்.

- **அற்புதமான போட்டி**

நெதர்லாந்து நாட்டு எப்.எம் ரேடியோ ஒன்று நூதனமான ஒரு போட்டியை வைத்தது. அங்குள்ள ஒரு கல்லூரி வளாகத்தை நிர்வாணமாக சுற்றி வந்தால், அந்த கல்லூரியில் படிக்கும் ஒரு வருட கல்லூரி செலவுக்கு தேவைப்படும் பணம் கொடுக்கப்படும் என்பதுதான் அந்த போட்டி. இந்த போட்டியில் இளம்பெண் ஒருவர் கலந்து கொண்டு கல்லூரியை நிர்வாணமாக சுற்றிவந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

- **நான்காவது உயர் எச்சரிக்கை**

ஐஸ்லாந்து மத்தியப் பகுதியில் உள்ள இரண்டாவது பெரிய எரிமலையான பர்டர்புங்கா 500மீ அடர்த்திகொண்ட வட்னஜோகுல் பனிப்பாறையின் கீழ் அமைந்துள்ளது. கடந்த வாரம் இந்த மலைப்பகுதியில் நூற்றுக்கணக்கான நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளதால் எரிமலை வெடிக்கக்கூடும் என்ற அச்சத்தில் அங்கு நான்காவது உயர் எச்சரிக்கை நிலைக்கான ஆரஞ்சுக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

- **மீண்டும் டெங்கு அபாயம்**

70 வருடங்களின் பின்னர் ஜப்பானில் மீண்டும் டெங்கு அபாயம் தலைதூக்கியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. சமீபகாலத்தில் டெங்கு நோய் தாக்கத்தினால் மூன்று பேர் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

- **10வருடமாக டிமிக்கி கொடுத்தவர் கைது**

கடந்த 2004ம் ஆண்டு யூன் மாதம் 10ம் திகதி ஹலிபாக்ஸ் நகரில் அடையாளம் தெரியாத நபர் ஒருவரால் நடத்தப்பட்ட துப்பாக்கி சூடு சம்பவத்தில் கெவின் பவுசர் என்பவர் மரணம் அடைந்தார். இதுதொடர்பாக வழக்கு பதிவு செய்த பொலிசார் கடந்த 10 வருடங்களாக அந்த மர்ம நபரை தேடி வந்துள்ளனர். பின் வேறு ஒரு வழக்கில் கைது செய்து விசாரணை நடத்தியபோது, அந்த துப்பாக்கி சூடு சம்பவத்தை நடத்தியவர் இவர்தான் என்பது தெரியவந்ததையடுத்து, அவரை கைது செய்துள்ளனர்

- **கற்றுத் தந்தவருக்கே ஆப்பு**

அமெரிக்காவில் உள்ள டியுளு ஏநுபுயுளு என்ற பகுதியில் 39 வயது துப்பாக்கி சுடும் பயிற்சி அளிக்கும் ஒருவர் ஒன்பது வயது சிறுமி ஒருவருக்கு துப்பாக்கி சுடுவதற்கு பயிற்சி அளித்துக்கொண்டிருக்கும்போது அந்த சிறுமி தவறுதலாக தனது பயிற்சியாளரையையே சுட்டுவிட்டார். இதனால் பயிற்சியாளர் பரிதாபமான நிலையில் மரணம் அடைந்தார்.

- **பயங்கரவாதிகளின் சொர்க்க பூமி**

பயங்கரவாதிகளின் சொர்க்க பூமியாக பாகிஸ்தான் விளங்குவதாக அமெரிக்காவின் பெண்டகன் செய்தித்துறை செயலாளரான அட்மிரல் ஜான் கிர்பி கூறியுள்ளார்.

- **விமானம் பாதியில் தரையிறக்கம்**

அமெரிக்காவில் உள்ள ஒரு விமானத்தில் பயணம் செய்த பயணிகள் இருவருக்கும் இடையே நடந்த இருக்கை சண்டையால் விமானம் பாதி வழியில் தரையிறக்கப்பட்டது. இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

- **போர் நிறுத்த ஒப்பந்தத்தில் – எகிப்து**

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்துக்கும் இடையே நீண்ட கால போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை கொண்டு வருவதற்கு எகிப்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனடிப்படையில் பாலஸ்தீனிய காஸா பகுதியில் இயங்கும் ஹமாஸ் போராளிகளிக்கும், இஸ்ரேலிய தரப்பினருக்கும் இடையே இந்த ஒப்பந்தத்தை கொண்டு வர முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **12மணி நேரத்தின் பின் அதிசயம்**

பிரேசில் நாட்டில் Valdelucio Goncalves என்ற 54வயது நபர் பல்வேறு உடல் நலக்கோளாறு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு அளித்த சிகிச்சையின் பலனின்று அவர் இறந்துவிட்டதாக டாக்டர்கள் அறிவித்து 12 மணி நேரத்தின் பின்னர் உயிர் பிழைத்துள்ளார்.

- **ஏழு வயதிலேயே பாலியல் கல்வி?**

பிரித்தானியாவின் பள்ளிக்கூடங்களில் பாலியல் கல்வியை ஏழு வயது முதலேயே பள்ளிக் குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும் என லிபரல் டெமாக்ரட்ஸ் கட்சி கோரியுள்ளது.

# நிகழ்வுகள்

## தேசிய அரச சிறுவர் நாடக விழா –2014

செய்தி : குணா




2014ஆம் ஆண்டுக்கான அரச சிறுவர் நாடகப் போட்டியில் திருகோணமலை மாவட்டத்தில் வெற்றி பெற்ற தி/தம்பலகாமம் குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயம் முதன் முதலாக தேசிய மட்டத்தில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய மட்ட சிறுவர் நாடகப் போட்டிகள் 2014.09.16ஆம் திகதி கொழும்பு ஜோன்டி சில்வா கலையரங்கில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை அதிபரின் வழிகாட்டலில், ஆசிரியை திருமதி.கேதீஸ்வரி தங்கராசா அவர்கள் இச் சிறுவர் நாடகத்தை எழுதி நெறியாழ்கை செய்திருந்தார். 2014ஆம் ஆண்டுக்கான தமிழ் தினப் போட்டியிலும் தம்பலகாமம் குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயம் முதன் முதலாக மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. மாவட்ட மட்ட போட்டியில் கொழும்பில் இருந்து வருகை தந்த வானொலி நாடக ஆற்றுகையாளர் திரு.கே.சந்திரசேகரன், திரு.ஏ.அழகேசன் ஆகியோர் நடுவர்களாக பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## புத்தக வெளியீட்டு விழா



அம்பிளாந்துறை இந்து இளைஞர் அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டில் அம்பிளாந்துறை ஆசிரியர் அழகுதனுவின் என் விழிவழியே கவிதைத் தொகுப்பு அறிமுக விழாவும் எங்கே அப்பா எனும் குறும்பட வெளியீட்டு விழாவும் 24.08.20141 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

## வில்லூன்றி கந்தசுவாமி தேர்த்திருவிழாவும், தீர்த்தோற்சவமும்

– கதிரவன் –



திருகோணமலையில் குடிகொண்டுள்ள பழமை வாய்ந்த கோவிலான வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த 24.08.2014 அன்று மிகவும் சிறப்பாக நடந்தேறியது. மிக அழகாக காட்சியளித்த முருகப்பெருமான் வீதி உலாவந்து அடியார்களுக்கு தன் எல்லையற்ற ஆசிகளையும் அருளையும் வழங்கினார். அதனைத் தொடர்ந்து அடுத்த நாள் முரகப் பெருமானின் தீர்த்த உற்சவமும் இனிதே இடம்பெற்றது. பெருந்திரளான அடியார்கள் முருகப்பெருமானின் திருவிழாவில் பங்குபற்றி தம் [illegible] பல்வேறு வகையான நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.


## லட்சுமி நாராயணர் தேர்த்திருவிழா

சசிகுமார்



லக்ஷமி நாராயணர் கோயில் தேர் உற்சவம் இன்று வியாழக்கிழமை 28.08.2014 காலை நடையேற்றது. முதலாவது வருடாந்த உற்சவத்தின் முதலாவது தேர் திருவிழா இது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிசிமலை காணி அளவீடு

# அரசியல்வாதிகளை நம்பாத மக்கள் ஆர்ப்பாட்டம்



அரிசிமலைப் பிரதேசத்தில் காணி அளவீட்டுக்குச் சென்றவர்களை அங்குள்ள மக்கள் திருப்பி அனுப்பி வைத்துள்ளனர்.

இம்மாதம் ஐந்தாம் திகதி அரிசிமலைக்காணிகளை அளவிடுவது தொடர்பாக இணக்கம் ஏற்படுத்தப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின.


பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், காவல்துறை மற்றும் அரச அதிகாரிகள் போன்றோரின் முன்நிலையில் நடைபெற்ற இச் சந்திப்பில் காணிகள் அளவீடு செய்யும் போது மக்களுக்கோ அல்லது அவர்களது காணிகளுக்கோ எந்தவித இடையூறும் விளைவிக்கப்பட மாட்டாது, உறுதிப்பத்திரம் இருந்தோ அல்லது இன்றியோ பல வருடங்களாக குறித்த பிரதேச காணிகளில் வசித்து வருபவர்கள் தொடர்ந்து அங்கு வசிக்க முடியும் என்று பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயினால், 13



## மதுரங்குடாவில் முகிழ்த்தது நட்பு - அன்வர் தலத்திற்கு விரைவு

# மூவின மக்களும் இணைந்து போராட்டம்

(கதிரவன்)





திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேசத்தின் மதுரங்குடா கிராமத்துப் பெண்ணொருவர் யானை தாக்கி மரணமானதை அடுத்து அக்கிராம மக்கள் தமக்குப் பாதுகாப்பைத் தருமாறு கோரிய ஆர்ப்பாட்டத்தில் அயல் கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் இணைந்துகொண்டுள்ளனர்.

மதுரங்குடாவின் அயற்கிராமமான கல்லறாவ சிங்களக் கிராம மக்களும் புடவைக்கட்டு முஸ்லிம் மக்களும் இப்போராட்டத்தில் இணைந்ததை அடுத்து சுமார் மூன்று மணித்தியாலத்திற்கு மேல் போராட்டம் நடைபெற்றுள்ளது. இதனையறிந்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர் அன்வர் உடனடியாக அவ்விடத்திற்குச் சென்று மக்களுடன் கலந்தாலோசித்ததுடன் பொருளாதாரப் பிரதி அமைச்சரின் ஊடாக இவ்விடயத்திற்கு தீர்வொன்றைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்ததை அடுத்து போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

# "இந்தியாவுடன் என்ன பேசினோம் என்பதை வெளியிட முடியாது"



இராஜதந்திர ரீதியாக நடக்க வேண்டிய காலம் இது இந்தியாவுடன் என்ன கதைத்தோம் என்பதை முழுமையாக நாமும் வெளியிட முடியாது, இந்தியாவும் வெளியிடமாட்டாது. நாமும் அதனைப் பின்பற்றி மிக அவதானமாக செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகுமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அ. அமிர்தலிங்கத்தின் 86 வது ஆண்டு பிறந்த நாள் நிகழ்வை நினைவு கூரும் வகையில் வலி. வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

உலக நாடுகளின் இராஜதந்திரப் போக்குகளை நாம் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த வகையில் இந்தியாவினுடைய இராஜதந்திரப் போக்குளையும் மற்றும் அதனுடைய செயல்பாடுகளையும் உணர்ந்து செயற்பட வேண்டியதும் அவசியமாகும்.

## அறநெறி ஆசிரியர்களுக்கான வாண்மைவிருத்திச் செயலமர்வு



சுமார் முப்பது அறநெறி ஆசிரியர்கள் மற்றும் ஆலய பரிபாலன சபையினர் பங்குபற்றிய இவ வாண்மை விருத்திச் செயலமர்வில் வளவாளர்களாக திருகோணமலை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் திரு.சி.மகேந்திரராசா , தம்பலகாமப் பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளர். திரு.வி.மதியழகன், கலாசார உத்தியோகத்தர் திரு.வி.குணபாலா, தம்பலகாமப் பிரதேச இந்து கலாசார உத்தியோகத்தர் திரு.பு.வசந்தன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இயந்திரமயமான தற்காலத்தில் சமய. ஒழுக்க. விழுமியக் கல்வி அவசியமாகின்றது.அந்த வகையில் தம்பலகாமம் பிரதேச அறநெறி ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு முதன் முதலாக தம்பலகாமம் குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் 2014.08.18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.


மலைமுரசு

MALAIMURASU

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159இ கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 30.08.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது



உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம்


### வான்படைச் சிப்பாய்கட்டிலில் இருந்து வீழ்ந்து மரணம் ???

சீனக்குடா விமானப்படை முகாமில் பயிற்சி பெற்று வந்த சிப்பாய் ஒருவர் இன்று (28) அதிகாலை 3 மணியளவில் நித்திரையில் இருந்த வேளை கட்டிலில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

இரண்டு மெத்தைகள் போடப்பட்டிருந்த கட்டிலில் இருந்து கீழே விழுந்து குறித்த சிப்பாய் உயிரிழந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

காலி - ஹபராதுவ பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய டி.ஜி.ஐ.விதுரங்க என்ற விமானப்படை சிப்பாய் கட்டிலில் இருந்து கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்ததாக பதில் விமானப்படை ஊடகப் பேச்சாளர் விங்கமாண்டர் பத்மந்த கொஸ்தா தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org